www.padippakam.com

# பொதுவுடைமை

## மார்க்சிய - லெனினிய கருத்தியல் ஏடு

**5**

**உள்ளே.....**

- **இடது சாரிகளின் நிகழ்ச்சி நிரல் பற்றி**
  -தலையங்கம்
- **கருத்தியல் போராட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் திட்டப் பிரச்சினையை முன்வைத்தலே ஒன்றுபட்ட கட்சிக்கு அடிப்படை**
  - *II* "ஜோதியில் கலந்துவிடு" மனோபாவம் ஒற்றுமைக்கு தடையாக உள்ளது
  - *III* இந்தியாவில் விஞ்ஞானபூர்வமான திட்டம் புறக்கணிக்கப் பட்ட்தற்கான சாட்சியங்கள்: தோழர்கள் A.B. AMK, திபங்கர் பட்டாச்சார்யா
- **விவசாயிகளின் வர்க்க போராட்டத்திற்கான திசைவழி குறித்த அணுகுமுறை**
- **மீண்டும் வேண்டாம் ஹிரோசிமா–நாகசாகி**
- **விவசாயப் பிரச்சனையில் மாநில அமைப்புக் கமிட்டி (S.O.C)யின் அணுகுமுறை குறித்து சில விவாத குறிப்புகள்**
- **தி.மு.க. ஆட்சியே! பயங்கரவாத நடிவடிக்கைகள் தடுப்புச்சட்டத்தை திரும்பபெறு!**

இதழ் - 5 மே - ஆகஸ்டு '98 விலை ரூ.5.00

படிப்பகம்

www.padippakam.com

பொதுவுடைமை
மார்க்சிய - லெனினிய கருத்தியல் ஏடு

ஆசிரியர் குழு:

**சோலையப்பன்**
**சரவணன்**
**எல்ஜியெஸ்**

வெளியீடு:

**மார்க்சிய படிப்பு வட்டம்**

**மக்கள் விடுதலை முன்னணி**

தொடர்புக்கு:

**இல.கோவிந்தசாமி**
மே/பா
தி. சிலப்பதிகாரய
எண் 1, முதல்தெரு
சோமசுந்தர பாரதி நகர்
வடபழனி
சென்னை- 600 026
தொ.பே.:481 4850

# இடதுசாரிகளின் நிகழ்ச்சி நிரல் பற்றி

புரட்சிகர இடதுசாரிகளான இ.க.க (மா.லெ) ரெட்ஃபிளாக், லிபரேசன், பிரஜாபந்தா (New Democracy), சி.ஒ.ஐ, எம்.சி.பி.ஐ, ஜனசக்தி ஆகியவற்றின் கூட்டு நடவடிக்கையில் ஜூலை பதினைந்தாம் தேதி டெல்லி நாடாளுமன்றத்தின் முன் தர்ணா நடைபெற்றது. ஏகாதிபத்திய நிறுவனங்களின் கொள்ளையை எதிர்த்தும் 'இந்துத்துவா' பா.ஜ.க. ஆட்சியின் பாசிச அபாயம், மக்கள் மீதான ஒடுக்குமுறை மற்றும் யுத்த முயற்சிகளை எதிர்த்தும் குறிப்பான முழக்கங்களின் அடிப்படையில் நடத்தப்பட்ட இந்த தர்ணாவில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து இந்த ஆறு அமைப்புகளும் தொழிலாளர் பிரச்சினை, டிசம்பர்-6, மசூதி இடிப்பு பிரச்சினை, நக்சலைட் ஒடுக்குமுறை போன்றவற்றில் கூட்டு நடவடிக்கைகள் எடுக்க தீர்மானித்திருப்பது வரவேற்கத் தகுந்தது.

லிபரேசன் குழு செயலர் தோழர் விநோத் மிஸ்ரா சென்னையில் பத்திரிகை பேட்டி ஒன்றில் தில்லியில் அனைத்து கம்யூனிஸ்ட் கட்சிகள் மாநாடு ஆகஸ்டு 12ம்தேதி நடைபெறுவதை அறிவித்துள்ளார். இந்த மாநாட்டில் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்குள் இடையே உள்ள பிரச்சினைகள், ஒன்றிணைவது குறித்து விவாதிக்கப்படும் என்று கூறியுள்ளார். இது பற்றிய விவரம் எதுவும் தெரியவில்லை. எனினும் இத்தகையதொரு முயற்சியின் விளைவுகள் குறித்து அறிந்து கொள்ள நாம் ஆர்வமாக இருக்கிறோம்.

S.U.C.I என்று அழைக்கப்படும் சோசலிஸ்ட் யூனிட்டி சென்டர் ஆப் இந்தியா அமைப்பின் பொதுச் செயலர் கூட சி.பி.ஐ, சி.பி.எம், லிபரேசன், பிரஜாபந்தா, ஜனசக்தி இன்னும் பல்வேறு கம்யூனிடு, புரட்சிகர குழுக்களுக்கு இன்றைய ஆட்சிக்கு எதிரான ஒற்றுமையைக் கட்டியமைப்பது குறித்து விவாதிப்பதற்காக கூட்டம் ஒன்றைக் கூட்டியுள்ளார்.

இத்தகைய முயற்சிகள் வரவேற்கப்பட வேண்டும். சி.பி.ஐ, சி.பி.எம் தலைமைகள் இந்தியாவில் ஏகாதிபத்தியத்தின் கொள்ளையையும், இந்திய அரசின் பாசிச முயற்சியையும் குறைத்து மதிப்பிடுவதாலும், தாமே ஆட்சியில் பங்காளிகளாக ஆவதாலும், காங்கிரஸ் – பிஜேபி ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள் என்று உணர மறுப்பதாலும் இத்தகைய இடதுசாரி கூட்டு முயற்சிகளிலும், அரசியல் உறுதிப்பாட்டிலும் எத்தகைய பங்களிப்பார்கள் என்பது கேள்விக் குறியாக உள்ளது. சி.பி.எம் தலைமையிலான இடது முன்னணியும், வினோத்மிஸ்ரா முன்வைக்கும் இடது பெருங் கூட்டமைப்பும் இத்தகைய பின்னனியில் பொருள் அற்றதாக உள்ளது. அதே சமயம் புரட்சிகர இடதுசாரிகளின் ஒரு பிரிவாக உள்ள மக்கள் யுத்தம், எஸ்.ஒ.சி, போல்சுவிக், எம்.சி.சி, பார்ட்டி யூனிட்டி போன்றவர்களின் கண் மூடித்தனமும், துணிச்சல் வாதமும்கூட இடதுசாரிகளின் கூட்டுநடவடிக்கை மற்றும் அரசியல் முன்முயற்சிக்கு தடையாக உள்ளது. எனவேதான் பிற புரட்சிகர இடது சாரிகளின் கூட்டு நடவடிக்கைகளுக்கான அரசியல் முன்முயற்சியும் உறுதிப்பாடும் இந்திய அரசியலில் முக்கியத்துவம் உடையதாகிறது.

செயல்தந்திர நோக்கில் இத்தகையதொரு நிகழ்ச்சி நிரலை நாம் வரவேற்றபோதிலும் புரட்சியாளர்களின் ஒற்றுமையை சாதிக்கவும் ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கவும் கருத்தியல் போராட்டத்தின் நிகழ்ச்சிநிரலில் திட்டப் பிரச்சினையை முன்வைத்து தோழமையான விவாதங்கள் மூலம் விஞ்ஞான பூர்வமான திட்டத்தை உருவாக்கும் கடமையான யுத்ததந்திர நிகழ்ச்சிநிரலை ஒரு போதும் மறக்கக் கூடாது, கைவிடக்கூடாது என்பதை புரட்சிகர அணிகளின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

ஆசிரியர் குழு

படிப்பகம்

www.padippakam.com

# கருத்தியல் போராட்டத்தின் நிகழ்ச்சிநிரலில் திட்டப் பிரச்சினையை முன்வைத்தல் ஒன்றுபட்ட கட்சிக்கு அடிப்படை

— எல்ஜியெஸ்

கடந்த 97-ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் வெளியான பொதுவுடமை முதல் இதழில் பிரசுரமான மேற்படி தலைப்பிலான கட்டுரையின் முதல் பகுதிக்குப் பின்னர் தொடர்ச்சியானது இப்போதுதான் வெளிவருகிறது. இருப்பினும் இந்தப் பிரச்சினைக்கு தொடர்புடையது என நான் கருதிய இரண்டு கட்டுரைகள் (1) குறிதவறிய அம்புகளும் கூர்மழுங்கிய அம்பும் பொதுவுடமை இதழ் 2லும் (2) மார்க்சிய-லெனினிய இயக்கத்தில் உள்ள மாபெரும் மூன்று நோய்கள் பொதுவுடமை இதழ் 3-லும் வெளியானது.

இந்த ஒரு வருட இடைவெளியில் எமது அமைப்பான மாநில சீரமைப்பு கமிட்டி கடந்த 98, பிப்ரவரியில் இ. க. க. (மா. லெ) செங்கொடியில் (Red FLAG) இணைந்துவிட்டது. ரெட்ஃபிளாக் தலைமையானது திட்டப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை அங்கீகரித்தது. 4-வது அகில இந்திய மாநாட்டில் அது நிறைவேற்றிய திட்டமானது இடைக்காலத்திற்குரியது; புரட்சியாளர்கள் அனைவராலும் கருத்தியல் போராட்டத்தின் மூலம் ஒன்பதாவது காங்கிரஸ் வடிவில் திட்டப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்; விஞ்ஞான பூர்வமாக ஆக்கப்பட வேண்டும் என்பதை ஒப்புக் கொண்டது. [இது தொடர்பான மாநில சீரமைப்புக் கமிட்டியின் அணிகளுக்கான அறிக்கையையும் மாநில சீரமைப்புக் கமிட்டி, சி. ஆர். சி. சி. பி. ஐ. எம். எல் (ரெட்ஃபிளாக்) செயலர்கள் கையொப்பமிட்ட கூட்டறிக்கையையும் 2-ம் 3-ம் பக்கங்களில் காண்க]

மேலும், சென்னையில் 4.4.98 அன்று நடந்த ஒரு கருத்தரங்கில் ரெட்ஃபிளாக் பொதுச் செயலாளர் தோழர் K.N.R புதிய சூழலானது புதிய வர்க்க சக்திகள் பற்றிய ஆய்வை கோருகிறது. இதனடிப்படையில் புதிய திட்டம், யுத்ததந்திரம் செயல்தந்திரம் போன்றவை வகுக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தினார். இது மட்டுமல்ல, மார்க்சிய-லெனினிய இயக்கத்தின் வரலாற்றிலேயே அதிசயமாக கட்சியின் மாநிலப் பிரிவு பிற புரட்சிகர அமைப்புகளுடன் இணைந்து கருத்தியல் பத்திரிகை பொதுவுடமை தொடர்ந்து கொண்டுவர கொள்கை பூர்வமாகவும், நடைமுறையிலும் ரெட்ஃபிளாக் ஏற்றது. மாநில சீரமைப்புக் கமிட்டியும் இவை அனைத்தையும் கருத்தில் கொண்டும், சர்வதேசிய நிலைபாடுகளில் உள்ள ஒற்றுமையின் அடிப்படையிலும், ஒப்பீட்டளவில் ஒரு சரியான போக்கை இந்திய புரட்சிகர இயக்கத்தில் அடையாளப்படுத்த முயற்சிக்கும் ரெட்ஃபிளாகக்கில் தன்னை இணைத்துக் கொண்டது

## II

### ''ஜோதியில் கலந்து விடு'' மனோபாவம் ஒற்றுமைக்கு தடையாக உள்ளது!

நாம் கடந்த ஐந்து வருடங்களாக...

1. 1970 திட்டம் (PROGRAMME) புரட்சியின் கட்டம், முதலாளியத் தன்மை, குருச்சேவிய திரிபுக்கு எதிரான நிலைபாடு, மக்கள் யுத்தம் மூலம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுதல் மையக்கடமை என்ற ஆக்கபூர்வ கூறுகளை கொண்டிருந்த போதிலும் புறநிலை ஆய்வின் அடிப்படையிலும் லெனினிய முறையியலின் அடிப்படையிலும் 70-திட்டம் அமையவில்லை என்ற விமர்சனத்தை முன் வைத்துள்ளோம்.

2. குழுக்களாக உள்ள நிலைமையில் இருந்து ஒன்றுபட்ட கட்சி அமைய கருத்தி

(தொடர்ச்சி-4ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com

# மாநில சீரமைப்பு கமிட்டி (இ. க. க. மா. லெ.) அணிகளுக்கான அறிக்கை

உலகளாவிய அளவில் ஏகாதிபத்தியத்தின் பொது நெருக்கடி கூர்மையடைவதும், ஏகாதிபத்தியமானது நவீன காலனீய தாக்குதலை ஒடுக்கப்பட்ட நாடுகள் மீது அதிகரித்து வருவதுமான சூழல் உள்ளது. இந்தியா போன்ற ஒடுக்கப்பட்ட நாடுகளில் உள்ள ஆளும் தரகு வர்க்கங்கள் பரந்துபட்ட மக்கள் மீது தீவிர தாக்குதலை தொடுத்து வருவதுமான சூழலும் உள்ளது. இந்த ஏகாதிபத்தியத்தினதும், பிற்போக்காளர்களினதும் தாக்குதலை எதிர்கொள்ளவும் மக்களை புரட்சிக்காக அணி திரட்டவும் ஒன்றுபட்ட கட்சி, விஞ்ஞான பூர்வமான திட்டம் என்ற இலக்கை நோக்கி நடைபோடவும் ஒத்தக் கருத்துள்ள மா. லெ. புரட்சியாளர்கள் நெருங்கி வருவதும் ஒன்றுபடுவதும் அவசியமாக உள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக மாநில சீரமைப்பு கமிட்டி (மா.லெ)யும் சீ.ஆர்.சி. செங்கொடி (மா.லெ)யும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டு சர்வதேசப் பிரச்சினை, திட்டப் பிரச்சினை, ஜனநாயக மத்தியத்துவ கோட்பாடு மற்றும் ஊழியர் கொள்கை போன்றவை குறித்து விவாதித்து வந்தன. இதன் தொடர்ச்சியாக 1-2-98 அன்று நடந்த செங்கொடி மையக்குழு பிரதிநிதிகளுக்கும் மாநில சீரமைப்புக் கமிட்டி பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற விவாதத்தின் போது கீழ்வரும் விஷயங்களில் ஒத்த புரிதல்கள் ஏற்பட்டன.

முதலாவதாக, சர்வதேச நிலைப்பாடுகளில்-

அ) ஏகாதிபத்தியத்தின் நவீன காலனீய இடைக்கட்டம்

ஆ) மாபெரும் விவாதத்தில் உள்ள புரட்சிகர நிலைப்பாடுகள்

இ) வர்க்க சமரச மூன்றுலக கோட்பாட்டிற்கு எதிர்ப்பு

போன்றவற்றில் ஒற்றுமை காணப்பட்டது.

அடுத்து இந்திய ஜனநாயக புரட்சியின் திட்டம் குறித்த பிரச்சனையில்-

அ) நவீன திரிபுவாதிகளுக்கு எதிரான போராட்டம்

ஆ) இந்திய முதலாளி வர்க்கத்தின் தரகுத் தன்மை மற்றும் ஜனநாயக புரட்சிக் கட்டம்

இ) புதிய ஜனநாயக இந்தியாவை உருவாக்க அரசியல் அதிகாரத்தை மக்கள் யுத்தத்தின் மூலம் கைப்பற்றல் என்ற மையக்கடமையை ஏற்றல்

ஈ) கட்சியமைப்பை சூழ்ந்து வெகுஜன, வர்க்க அமைப்புகளை உருவாக்கி மக்களை அணிதிரட்டுதல்

போன்ற அடிப்படை நிலைப்பாடுகளில் ஒற்றுமை காணப்பட்டது.

மேலும், இந்திய ஜனநாயகப் புரட்சிக்கான திட்டத்தை வளர்ப்பதில் உள்ள பிரச்சினைகளில்-

அ) ஒப்பீட்டளவிலான முதலாளிய வளர்ச்சி

ஆ) தேசிய இனச் சிக்கல்

இ) ஜாதிய முறை ஒழிப்புக்கான போராட்டம்

போன்றவற்றில் உள்ள வேறுபாடுகளை விவாதத்தின் மூலம் உரிய ஜனநாயகமத்தியத்துவ அமைப்புக் கோட்பாடுகளின் வழிகாட்டுதலில் தீர்வு காண வேண்டும் என்பதிலும் ஊழியர் கொள்கையின் அவசியத்திலும் ஒத்த புரிதல் ஏற்பட்டது.

மேற்கண்டவற்றின் அடிப்படையில் மாநில சீரமைப்புக் கமிட்டி, (மா. லெ) சி. ஆர். சி செங்கொடி (மா. லெ.) யில் இணைந்து விடுவது என்ற கொள்கை முடிவு எட்டப்பட்டது. இந்த முடிவை மாநில சீரமைப்புக் கமிட்டி அணிகளுக்கு அறிவித்து முறையான ஒப்புதல் பெற்ற பின்னர் வெளிப்

பொதுவுடைமை



படிப்பகம்

www.padippakam.com

படையாக மக்களுக்கு இந்த இணைப்பு பற்றி அறிவிப்பது என்ற முடிவும் எட்டப்பட்டது

இன்று மா. லெ இயக்கத்தில் உள்ள வலது மற்றும் இடது விலகல் போக்குகளை சித்தாந்த ரீதியில் எதிர்கொண்டு போராடவும் மற்றும் விஞ்ஞான பூர்வமான திட்டம் மற்றும் ஒன்றுபட்ட கட்சியை எட்டும் இலக்கை அடையவும் மாநில சீரமைப்புக் கமிட்டி செங்கொடியில் இணைவது காலத்தின் அவசியமாகிறது. தவறான வலது இடது விலகல் போக்குகளை முறியடிக்க சரியான ஒரு போக்கை நிலை நிறுத்தும் முயற்சியில் ஈடுபாடு கொண்டுள்ள செங்கொடி போக்கில் மாநில சீரமைப்புக் கமிட்டி தன்னை இணைத்துக் கொள்வதை மா. லெ. புரட்சிகர அணிகள் வரவேற்பர் என்று நம்புகிறோம்.

1-2-98

தங்கள்

***மாநில சீரமைப்புக் கமிட்டி***

***இ.க.க. (மா.லெ) தமிழ்நாடு***

## கூட்டறிக்கை

தமிழ்நாடு மாநில சீரமைப்பு குழுவின் பிரதிநிதிகளும் இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்ஸிஸ்ட்- லெனினிஸ்ட்) ரெட்ஃபிளாக்கின் மையப் புனரமைப்பு குழுவும் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஐக்கியத்தையும் மற்றும் இரண்டு அமைப்புகளின் இணைப்பையும் நோக்கமாகக் கொண்டு, கருத்தியல், அரசியல் மற்றும் அமைப்பியல் விசயங்களைப்பற்றி விவாதம் நடத்தி வந்தன. இந்த விவாதங்களின் வழியாக உலக கம்யூனிஸ்டு இயக்கத்தை பற்றியதான அடிப்படை பிரச்சினைகளிலும், தற்போதைய உலக மற்றும் இந்திய சூழ்நிலைமைகளை பற்றியதான பகுத்தாய்விலும், இந்திய புதிய ஜனநாயக புரட்சியின் பிரச்சினைகளிலும், மேலும் கம்யூனிஸ்டு இயக்கத்திற்கு உள் இருக்கின்ற கருத்தியல் போராட்டத்தை ஆழமாக நடத்த வேண்டியதன் தேவை மற்றும் கட்சியின் புனரமைப்பை முழுமையடைய செய்வதன் வழியில் திட்ட பிரச்சினையை மேலும் ஆழமாக விஞ்ஞான பூர்வமான முறையில் அணுகுவது பற்றியும் இரு அமைப்புகளும் ஒன்றுபட்ட பார்வையை அடைந்தன.

நிகழ்கால சர்வதேச மற்றும் இந்திய சூழ்நிலைமையில், மார்க்சிய-லெனினிய சக்திகளின் ஐக்கியத்திற்கும் மற்றும் விவசாயி மக்கள் மீது அதிகரிக்கின்ற ஒடுக்குமுறைகள் உள்ளிட்ட நவகாலனியமயமாக்குவதற்கு எதிராக அனைத்திந்திய தாக்குதலை தொடுப்பதற்கும் தடைகளை ஏற்படுத்துகிற அனைத்து அந்நிய போக்குகளையும் தோற்கடித்து போல்ஷிவிக் முறையில் அனைத்திந்திய அளவில் கட்சிகட்டுவது மற்றும் அனைத்து மார்க்சிய-லெனினிய சக்திகளை ஐக்கியப்படுத்துவது என்பதுதான் மிக முக்கியமான கடமைகள் என்பதில் இரு அமைப்புகளும் ஒன்றுபட்ட புரிதலுக்கு வந்துள்ளன. தற்பொழுது தமிழ்நாட்டில் இனவாத கருத்தியல்களுக்கும் சாதிவாத சக்திகளுக்கும் பல்வேறு முன்னாள் மார்க்சிய—லெனினிய சக்திகள் அடிபணிந்து கொண்டிருக்கும் தருணத்தில் மார்க்சிய-லெனினிய சக்திகளின் ஐக்கியம் முக்கியத்துவம் பெறுகிறது.

இந்த அனைத்து அம்சங்களையும் உள்வாங்கி இரண்டு அமைப்புகளும் இணைவதற்கான பொதுப் புரிதலுக்கு வந்ததுடன் இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்டு-லெனினிஸ்டு) ரெட்ஃபிளாக்கின் கொடியின் கீழ் இயங்குவதற்கும் முடிவெடுக்கப்பட்டது. இப்படிப்பட்ட ஐக்கியத்திற்கான வளர்ச்சிப் போக்குடன் தமிழ்நாட்டிலும், நாட்டிலுமுள்ள அனைத்து மார்க்ஸிய-லெனினிய சக்திகளும் கைக்கோர்க்க வேண்டும் என்று நாங்கள் அறைகூவல் விடுகிறோம்.

(ஒப்பம்)

**இல. கோவிந்தசாமி**

செயலாளர்

மாநிலப் சீரமைப்பு கமிட்டி,

CPI (ML) தமிழ்நாடு,

(ஒப்பம்)

**கே. என். இராமச்சந்திரன்**

செயலாளர்

மையப் புனரமைப்பு கமிட்டி,

CPI (ML) ரெட்ஃபிளாக்

தேதி : 1, மார்ச்—1998



படிப்பகம்

www.padippakam.com

(முதல் பக்கத் தொடர்ச்சி)

யல் (சித்தாந்த-IDEOLOGY) போராட்டம் முதன்மையாதல் வேண்டும் எனவும், கருத்தியல் போராட்டம் தோழமையாகவும், வெளிப்படையாகவும் நடத்தப்படல் வேண்டும் எனவும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

3. கருத்தியல் போராட்டத்தில் மார்க்சிய-லெனினியத்தை பாதுகாத்து, வளர்த்தெடுத்தல் ஒரு கூறு என்றும், திட்டப் பிரச்சினையை நிகழ்ச்சி நிரலில் முன்வைத்து தோழமையான விவாதங்கள் மூலம் இறுதியாக்குவது மறு கூறு என்றும் எடுத்துக் காட்டியுள்ளோம்.

4. லெனின் ஒன்றுபட்ட கட்சிக்கான அடிப்படையாக கருத்தியல் ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்துவதையும், குறிப்பாக கருத்தியல் ஒற்றுமையானது திட்டத்தால் பிரதிபலிக்கப்பட்டு, திடப்படுத்தப் பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதையும் எடுத்துக் கூறினோம். மேலும் திட்டம், செயல்தந்திரம் போன்றவை ஒற்றுமைக்கு (ஒன்றுபட்ட கட்சிக்கு)தேவைப்பட்டாலும் திட்டம்தான் அடிப்படை என்பதையும், செயல்தந்திர வேறுபாட்டுடன் புரட்சியாளர்கள் ஒரு அமைப்பில் வேலை செய்யலாம் என்பதையும், செயல்தந்திர பிரச்சினைகளில் உள்ள வேறுபாடுகளை மாநாடுகள் போன்ற அமைப்பு வடிவங்களில் ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் தீர்வு காணலாம் என்ற லெனின் வழிகாட்டுதலையும் எடுத்துக்காட்டி உள்ளோம். கருத்தியல் போராட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் திட்டப் பிரச்சினை இல்லாவிட்டால் அமைப்பு விரோதமும், தனிநபர் குரோதமும் தவிர்க்கப்பட முடியாதது என்று லெனின் எச்சரிப்பதையும் எடுத்துக் காட்டினோம். மேலே எடுத்துக் காட்டிய லெனினிய முறையியலின் அடிப்படையில்தான் புரட்சியாளர்கள் ஒன்றுபட முடியும் என்பதைத் தொடர்ந்து அறிவுறுத்தி வருகிறோம்.

ஆனால் என்னே! வேதனை— சோதனை" நாம் மேலே எடுத்துக் காட்டிய 4 நிலைபாடுகள் சரியா—தவறா என்பது குறித்து தமிழ் நாட்டில் உள்ள எந்த ஒரு மார்க்சிய-லெனினிய குழுவும் கருத்துக் கூறவில்லை இத்தனைக்கும் எல்லாக் குழுக்களுக்கும் எங்களது அனைத்து ஆவணங்களும், பத்திரிகைகளும் தரப்பட்டுள்ளன. இருப்பினும் சுத்தமான இருட்டடிப்பும் புறக்கணிப்பும் தான் நாங்கள் கண்ட பலன்.

இந்தியாவில் மார்க்சிய-லெனினிய இயக்கத்தின் இன்றைய நிலை என்ன? 100-க்கும் மேலான செயல்படும்- செயல்படாத குழுக்கள். கிட்டத்தட்ட 30 செயல்படும் குழுக்கள். சில குழுக்களின் பெயரிலேயே பல்வேறு போட்டித் துணைக் குழுக்கள் (உதாரணம்-மக்கள் யுத்தம், ஜனசக்தி) மா.லெ குழுக்கள் மட்டுமல்ல, இந்தியாவில் செயல்படும் அனைத்து விதமான 'கம்யூனிஸ்டு' பெயரில் இயங்கும் எல்லா குழுக்களும் [கட்சிகளும்,?)] தாம்தான் சரியான, உண்மையான, புரட்சிகரமான கம்யூனிஸ்டு கட்சி என்றும் எல்லா கம்யூனிஸ்டுகளும் தமது கட்சியில் வந்து இணைந்துவிட வேண்டும் என்றும் கூறி வருகின்றன. ''ஜோதியில் கலந்து விடு'' என்ற இத்தகைய மனோபாவமே கம்யூனிஸ்டுகள் ஒன்றுபடுவதற்கும்- ஒரு கட்சியாக அமைவதற்கும் தடையாக உள்ளது.

பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையினர் ஒன்றுபட்ட கட்சியாக அமைவதற்கு ஏற்பட்ட தடை மட்டுமல்ல; உழைக்கும் வர்க்கங்களும் மக்கட் பிரிவின் பல தரப்பினரும் கூட (இளைஞர், மாணவர், பெண்கள்) ஒரு தத்துவ அரசியல் நிலைபாட்டில், அமைப்பு வடிவில் ஒன்றுபட இயலாமல் கூறு போடப்படுகின்றனர். நான் அறிந்த வரை குறிப்பாக 10 மா.லெ குழுக்கள் அல்லது மொத்தத்தில் 15 கம்யூனிஸ்டு என தம்மை அழைத்துக் கொள்ளும் கட்சிகள் ஒவ்வொன்றும் தொழிலாளி, விவசாயி, மாணவர், இளைஞர், பெண்கள்,பண்பாட்டு அமைப்பு என்று மைய அமைப்புகளை உருவாக்கியும், உருவாக்கவும் முனைந்து உள்ளனர். பல திசைகளிலும் வழி நடத்துவதான இத்தனை அமைப்புகளை பெறுவதற்கு இந்திய உழைக்கும் மக்கள் என்ன பேறு பெற்றிருக்கிறார்கள்?



படிப்பகம்

www.padippakam.com

கம்யூனிஸ்டுகள் முன்னால் இரு மாபெரும் சவால்கள் உள்ளதென்று நான் கருதுகிறேன்.

ஒன்று, உழைக்கும் மக்களை அணி திரட்டி மூன்று எதிரிகளான ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம், அதிகாரவர்க்க தரகு முதலாளித்துவம் ஆகியவற்றை தூக்கி எறிதல். மக்கள் ஜனநாயகத்தையும் சோசலிசத்தையும் படைத்தல்.

இரண்டு, ஒரு விஞ்ஞானபூர்வ திட்டத்திற்காகவும், ஒன்றுபட்ட கட்சியை அமைக்கவும் கடினமான போராட்டத்தின் ஊடே தோழமையான விவாதங்கள் மூலம்சாதித்தல்.

இரண்டாவதை சாதிக்காவிட்டால் முதலாவதை சாதிக்க இயலாது. இந்திய கம்யூனிஸ்டு இயக்கத்தின் வரலாறு இந்த மாபெரும் படிப்பினையை நமக்கு வழங்கி உள்ளது.

அவ்வாறெனில் இந்தியப் புரட்சியைச் சாதிக்கும் அந்த திட்டத்தில் எத்தகைய விஷயங்கள் உள்ளடங்கும். எனது கருத்தில் மூன்று முக்கிய விஷயங்களில் விவாதமும் வரையறுப்பும் தேவைப்படுகிறது. அவை வருமாறு:

(1) இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகான ஏகாதிபத்திய அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள்

(2) இதை ஒட்டி இந்தியாவில் ஏற்பட்டுள்ள ஒப்பீட்டளவிலான முதலாளித்துவ வளர்ச்சியும் (தொழில்-விவசாயம்— சேவை என்ற மூன்று துறைகளிலும்) இதன் காரணமாக எழுந்துள்ள வர்க்க- அரசியல் சக்திகள் பற்றிய பகுப்பாய்வும்.

(3) இந்திய புரட்சியின் தனித்தன்மைகளாக விளங்கும் ஜாதி, மத,தேசிய இனம் பற்றிய விஞ்ஞான ரீதியான புரிதல்.

[இந்த மூன்று விஷயங்களில் சிலவற்றைப் பற்றிய எமது நிலைபாடுகள் உட்கட்சி ஆவணங்கள், மார்க்சிஸ்டு-லெனினிஸ்டு, பொதுவுடமை ஆகியவற்றில் முன்வைத்துள்ளதை வாசகர் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்].

பொதுவாக கம்யூனிஸ்டு இயக்கத்திலும் குறிப்பாக மா.லெ. இயக்கத்திலும் (1) கருத்தியல் போராட்டம் என்றால் என்ன என்பதன் வரையறை (2) குழுக்கள் நீடிப்பதற்கும் ஒன்றுபட்ட கட்சி அமையாமல் உள்ளதற்கும் அவர்கள் கூறும் கருத்துக்கள் (3) திட்டம் பற்றிய அவர்களது புரிதல்கள் ஆகியவை பற்றிய ஒரு சித்திரத்தை வாசகர் முன்னால் தீட்டுவதுதான் எனது லட்சியமாக உள்ளது. இது ஒரு கடினமான பணி என்பது அனைவரும் அறிந்த ஒன்று. இருப்பினும் இந்த முயற்சியில் பல்வேறு புரட்சிகர கம்யூனிஸ்டு இயக்க தோழர்களும் கூட பொதுவுடமையில் விவாதிப்பதன் மூலம் தோள் கொடுக்குமாறு நான் வேண்டுகிறேன்.

## III

## இந்தியாவில் விஞ்ஞானபூர்வ திட்டம் புறக்கணிக்கப் பட்டதற்கான சாட்சியங்கள்

முதல் சாட்சி தோழர் A.B.

1972 ஆம்ஆண்டு இக்கட்டுரை ஆசிரியர் மார்க்சிஸ்டு கட்சியில் இருந்த காலம். வகுப்பு ஒன்றுக்கு அக்கட்சி ஏற்பாடு செய்திருந்தது. இந்த வகுப்பில் திட்டம் பற்றியும் விளக்கப்பட்டது. மறைந்த தோழர் A. B. கூறியதன் சாரம்: ''1950 ஆம் ஆண்டு வரை கட்சிக்கு திட்டம் எதுவும் இல்லை. பின்னர் ஸ்டாலின் கேள்விகள் கேட்க, இந்திய கம்யூனிஸ்டு தலைவர்கள் பதில் அளிக்க ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது. எனினும் அதுவும் சரியாக இல்லை. பின்னர் 64-ஆம் ஆண்டு தான் இந்திய வரலாற்றில் ஒரு திட்டம் உருவானது''. எனவே முதல் 40 ஆண்டு காலம் அதாவது 1925 முதல் 1964 வரை இந்திய கம்யூனிஸ்டு இயக்கம் திட்டம் இன்றி செயல்பட்டதாகவும், தாம்தான் (சி.பி.எம் தான்) ஒரு திட்டத்தை முதலில் வகுத்துக் கொண்டதாகவும் மார்க்சிஸ்டு கட்சி கூறுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

## இரண்டாவது சாட்சி
## தோழர் தீபங்கர் பட்டாச்சார்யா
## (விடுதலைக் குழு)

இவரது சாட்சியம் கூட இ.க.க.(மா.லெ) லிபரேசன் (விடுதலை) 1994-ஜூன் 22-24இல் நடத்திய கட்சி வகுப்பில் 'இந்திய கம்யூனிஸ்டு இயக்கத்தில் திட்டம் பற்றிய விவாதம்' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையிலிருந்து தான் வாசகர்களுக்கு தரப்படுகிறது. இக்கட்டுரையும் இன்னும் சில கட்டுரைகளும் ஆங்கிலத்தில் உள்ளன. இன்னும் தமிழில் புத்தகமாக வெளிவர வில்லை. மேலே உள்ள தீபங்கர் பட்டாச் சார்யா கட்டுரையிலிருந்து சில பகுதிகளை வாசகர் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். நீண்ட மேற்கோள்களுக்காக பொறுத்துக் கொள்ளவும்.

''இந்திய கம்யூனிச இயக்கத்தின் வரலாற்று ரீதியான பல்வேறு பலவீனங்கள், தோல்விகளுக்கு மத்தியில் அனேகமாக மிகவும் வெள்ளிடை மலையாக / ஊனப் படுத்துவதாக திகழ்வது 1951 வரை கம்யூ னிஸ்ட் கட்சி ஒரு ஒருங்கிணைந்த திட்டத்தை உருவாக்க முடியாததே ஆகும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், கம்யூனிஸ்ட் கட்சி தனது முதல் 20—30 ஆண்டுகளை எந்தவிதமான தெளிவான, விரிவான திட்ட வழிகாட்டுதலும் இல்லா மலே கழித்து விட்டது. இந்த நிலைமையை சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.எஸ்.யு) அல்லது சீன கம்யூனிஸ்ட் கட்சியின் (சி.பி.சி) துவக்கக் கால வரலாற் றோடு ஒப்பிடும்போது மிகவும் பரிதாபத் திற்குரியதாக இருக்கிறது. அந்த இரண்டு கட்சிகளுமே தமது புரட்சிகர பயணத்தின் துவக்க காலத்திலேயே வலுவான திட்ட அடித்தளத்தைக் கொண்டிருந்தன. லெனின், 1897லேயே, அதாவது கம்யூனிஸ்ட் கட்சி உண்மையிலேயே அமைப்பாக்கப்பட்டு, வெகு ஜனத்தன்மையைப் பெறுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே, முதலாளித்துவ வளர்ச்சி குறித்த ஆய்வை மிகவும் அறிவாற் றல் மிக்க விதத்தில் தயாரித்து அளித்தார். சீன சமுதாயத்தில் வர்க்கங்களின் பகுப்பாய்வு குறித்த மாவோவின் படைப்பும் கூட சீனப் புரட்சியில் மிக துவக்கத்திலேயே ஒரு தத்துவ ரீதியான முன்னேறுதலாக அமைந்தது.''

''இருபதாம் நூற்றாண்டின் இரு மகத் தான புரட்சிகளின் சிற்பிகளான லெனினும் மாவோவும் இந்த இரு முன்னோடி ஆய்வு களிலும் அவரவர் நாட்டு புரட்சியின் ஸ்தூல மான நிலைமைகளுக்கேற்ப அனைத்தும் தழுவிய உண்மையை அல்லது மார்க்சிய கோட்பாடுகளை படைப்பாற்றல் மிக்க விதத்தில் ஒன்றிணைப்பதற்கான தளத்தை ஏற்படுத்தி இருந்தனர்.''

''மார்க்சியத்தின் பொதுவான வழி காட்டுதல்களை சுயமாக விவரிப்பதில் மிகக் குறைவான முயற்சிகளையே நாம் காண முடிகிறது. உண்மையில் இது இந்திய கம்யூனிச இயக்கம் எவ்வளவு தூரம் திவால் ஆகியிருக்கிறது என்பதையே காட்டுகிறது.''

''நமது மா.லெ. இயக்கத்தின் கருத்துப்போர் கூட பெருமளவு செயல்தந்திர அல்லது அமைப்பு தன்மையுடையதாக, அதுவும்கூட தெளிவற்ற தாகவும் அக்கறையற்றதாகவும் உள்ள பிரச் சினைகளாலேயே சூழப்பட்டிருக்கிறது. தெளி வும் அக்கறையும் கூட திட்டம் குறித்த பிரச் சினையை கருத்துப் போரில் உணர்வுப்பூர்வ மாக நுழைப்பதன் மூலம் மட்டுமே கொண்டு வரப்பட முடியும்.'' (அழுத்தம் எல்ஜியெஸ்)

''1964 பிளவுக்கு முன்பு, ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சி உட்கட்சி விவாதத்தில் இரண்டு முக்கிய இடைக் கட்டங்களைக் கொண்டிருந்தது. முதலாவது காலகட்டம், கட்சியின் முதல் திட்டம் உருவாக்கப்படுவ தற்கு முந்தைய காலமான 1946லிருந்து 51 வரை. அதற்குப் பிறகு 1955லிருந்து 56 வரை. ஆனாலும், 1960இல் கட்சி பொதுச் செய லாளர் அஜாய் கோஷ், ''அரசியல், கருத்தி யல் ரீதியில் சொல்வதானால், நாம் கைக்கும் வாய்க்குமாக வாழ்ந்து கொண்டிருக்கின் றோம். (வறுமையில் இருக்கின்றோம்) அவ்வப்போது எழும் அவசரப்பிரச்சினைகள் சிலவற்றை சமாளித்துக் கொண்டு, அடிப் படைப் பிரச்சினைகளில் ஒட்டுமொத்த மதிப்



படிப்பகம்

www.padippakam.com

பீட்டைத் தவிர்த்துக்கொண்டிருக்கின்றோம். விளைவு என்னவென்றால், வழிவிலகிச் செல்வதும் திக்குத்தெரியாமல் போவதும், முழுக்குழப்பமும்தான்'' என்று ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று.''

''சி. பி. எம். முக்கும் கூட,அதன் தலைவர்களே ஏற்றுக்கொண்டபடி, இந்த விதத்தில் பெரும் வித்தியாசம் ஏதுமில்லை. 1985இல் 'மார்க்சிஸ்ட்' இதழில் பிரசுரிக்கப்பட்ட, 1951 கொள்கை அறிக்கை (1951 செயல்தந்திரத்தின் சட்டப்பூர்வமான வடிவம்) குறித்த பரிசீலனையில், பசவப் புன்னையா ஒத்துக்கொண்டார். அதாவது 1951—52, 1967-68 காலங்களில் கொள்கை அறிக்கை ஒருபோதும் ஆழமான விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுமில்லை, கம்யூனிஸ்ட் கட்சி கட்டுவது வர்க்கப் பிரிவு அமைப்புக்களைக் கட்டுவது குறித்த கொள்கை அறிக்கையின் புரிதல்கள் நடைமுறைப்படுத்தப்படவும் இல்லை என ஒத்துக்கொண்டார். 1967—69 பிளவின் போது, ஒட்டுமொத்த கட்சித் திட்டத்தையும், கொள்கை அறிக்கையையும் சி. பி. ஐ. (எம்.எல்) கேள்விக்குள்ளாக்கிய போது, சி பி எம் - மின் 8வது காங்கிரஸ் கொள்கை அறிக்கையை மீண்டும் நிறைவேற்றியது. ஆனால் 1985 'மார்க்சிஸ்ட்' ஏட்டில் பசவபுன்னையா எழுதியது போல், அது கட்சித் திட்டத்தில் ஏற்கெனவே செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் குறித்தோ அந்த மாற்றங்கள் கட்சியின் செயல் தந்திரவழியில் ஏற்படுத்தத்தக்க உள்ளார்ந்த விளைவுகள் பற்றியோ தீவிரமாக சிந்திக்காமலேயே அது (கொள்கை அறிக்கை) மீண்டும் உறுதி செய்யப்பட்டது. இயல்பாகவே கொள்கை அறிக்கையைவியாக்யானம் செய்வது குறித்த வேறுபாடுகள் தொடர்ந்தன. குறிப்பாக 1969—70லிருந்து நடந்த பொலிட்பீரோ விவாதங்கள் 1975-76இல் பொலிட்பீரோவிலும், மத்திய கமிட்டியிலும் நடந்த விவாதங்கள், அத்தகைய வேறுபாடுகள் சில சமயங்களில் 1948—50 காலத்திய கருத்துப்போர் (சீனப்பாதையா ரஷ்யப் பாதையா எனப்படும்கருத்துப்போர்) தன்மையைக் கூட எட்டியிருப்பதை வெளிப்படுத்துகின்றன.''

''பி. சுந்தரையா வெளியேற்றப்பட்ட பிறகும்கூட இந்த விவாதம் தொடர்ந்தது. பசவபுன்னையாவும் கூட தனது 1985 கட்டுரையில் இந்தப் பிரச்சனையை முடிக்காமலேயே விட்டுவிட்டார். அவர் 1951லிருந்து கொள்கை அறிக்கைக்கு எதிராக அமைந்த சில எதிர்மறையான பாதகமான விசயங்களை விவரித்தார். அந்தப் பாதக அம்சங்களுக்கு ஈடுகட்டுவது போல் தோற்றமளிக்கக்கூடிய சில சாதகமான விசயங்களையும் கூட பட்டியலிட்டுக் காட்டினார். ஒட்டுமொத்த விளைவு என்னவென்றால், நகர்ப்புற மற்றும் கிராமப்புற எழுச்சிகள் போன்ற பாணியைக் கொண்ட கொள்கை அறிக்கையே சி. பி எம். மின் செயல் தந்திர வழிகாட்டியாக தொடர்ந்தது. ஆனால், கட்சியின் குறுகிய, நடுத்தர, நீண்டகால நடைமுறைகளுக்கும் தொலை நோக்குகளுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லாமல் அது இருந்தது...தெளிவற்ற, கறாரற்ற திட்டமும் செயல் தந்திர வழியும் சி. பி. எம். தனது சந்தர்ப்பவாத அரசியலைத் தொடர்வதற்கு ஏராளமான வாய்ப்புக்களை வாரி வழங்குகிறது என்பது தெரிந்த விசயம்தான்''.

''கட்சி அகில இந்திய அளவில் இரு பெரும் பிளவுகளைச் சந்தித்த போதும்கூட, நமது இயக்கத்தில் விவாதம் திட்டரீதியான விவாதமாக வளர்ந்தது மிக அபூர்வமாகவே நடந்திருக்கிறது. குறைந்தபட்சம் கம்யூனிஸ்ட் ஜனரஞ்சக பார்வையில் கூட இந்தப்பிளவுகளின் திட்டரீதியான முக்கியத்துவம் கிரகிக்கப்படவே இல்லை. சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் ஏற்பட்ட பிளவுகளின் பரந்த பின்னணியில் இந்தப் பிளவுகள்(இந்தியாவில்) ஏற்பட்டிருக்கின்றன. என்கிற விசயமே இந்த குழப்பத்துக்கு முக்கிய காரணம் ஆகும். சுவையான விசயம் என்னவென்றால், சி.பி அய். கட்சி பிளவின் உள்ளடக்கத்தை நிராகரிக்கிறது, குறைத்து மதிப்பிடுகிறதென்றும் பிளவை, சீன-சோவியத் பிளவின்தொடர்ச்சியாகப் பார்க்கிறது என்றும் 60 களின் நடுப்பகுதியில் சி. பி. எம். குற்றம் சாட்டியது. ஆனால் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட சி. பி. எம் —சி. பி. ஐ. எம். எல் பிளவின் போது சி. பி.அய்யின் அதே விஷமத்தைப்





படிப்பகம்

www.padippakam.com

புரிந்த குற்றச் சாட்டுக்கு சி. பி. எம். மும் ஆளானது. சீன கம்யூனிஸ்ட் கட்சிதான் பிளவைத் தூண்டியதாக குற்றம் சாட்டப் பட்டது. சீன கம்யூனிஸ்ட் கட்சி வெளிப் படையாக ஆதரிக்காமல் இருந்திருக்குமே யானால் மிகக்குறைவான சிலர் மட்டும் வெளியேறுவது, வெளியேற்றப்படுவது என்ப தாக அந்தப் பிளவு முடிந்து போயிருக்கும் என சி.பி.எம் வாதிட்டது. புதிதாய்ப் பிறந்த கட்சியுடன் பிரச்சனைகள் குறித்த விவாதத் தில் ஈடுபடுவதற்குப் பதிலாக, 'சீன கம்யூ னிஸ்ட் கட்சியுடன் எமது வேறுபாடுகள்' என்று சொல்லி சீன கம்யூனிஸ்ட் கட்சி யுடனான விவாதத்தில் ஈடுபடவே சி.பி.எம் மத்தியகமிட்டி விரும்பியது. 'சீனத்தலைவர் எம் தலைவர்' போன்ற முழக்கங்கள், சி. பி. அய். எம். எல். தயக்கமின்றி வெளிப் படுத்திய சீனம் குறித்த வழிபாடு ஆகியன மூலம் சி. பி. அய். எம். எல்லும் கூட சி.பி. எம் பிரச்சாரத்திற்கு உதவியது.

சீன—சோவியத் உறவு விரிசல், மாபெரும் விவாதம் ஆகியவற்றுக்கு அப்பால் அல்லது அதற்கு முன்னரேகூட, சி. பி. அய். யிலும் அதைத் தொடர்ந்து சி.பி.எம்.மிலும் நடந்த அரசியல் செயல்தந்திர விவாதங்கள், ரஷ்யப் பாதை ×சீனப்பாதை எனும் வரம்புகளுக்குள் ளேயே எப்போதும் நடத்தப்பட்டிருக்கின்றன விவாதத்தை, புரட்சியின் வெறும்பாதை விவகாரத்தினுள் குவித்து முடக்கியதனால், ரஷ்ய மற்றும் சீனப்புரட்சிகளின் திட்டம் குறித்து ஆழமான புரிதல் பெறுவதற்குத் தடை யாக இருந்தது; இந்திய நிலைமைகளுக்குப் பொருத்தமான இந்தியப் பாதை, இந்திய திட்டம் உருவாவதற்கும் தடையாக இருந் தது. ரஷ்யப்பாதை நகர்ப்புற தொழிலாளர் வர்க்க எழுச்சியை ஒத்ததாக கருதப்பட்டது. சீனப்பாதை விவசாய கொரில்லா யுத்தமன்றி வேறல்ல என்று அர்த்தப்படுத்தப்பட்டது.

இவ்வாறாக இவ்விரு பாதைகளுக்கிடை யில் சீன மதில் சுவர் எழுப்பப்பட்டது. இரு நாடுகளின் குறிப்பான வரலாற்றுப் பின்னணி கள், சூழ்நிலைகள், இரண்டு பாதைகளின் தீர்மானகரமான காரணிகள்—தனித்தனி யானதாக ஆக்கப்பட்டன. இரண்டு புரட்சி களுக்கும் இடையிலான அடிப்படையான திட்டரீதியான அல்லது போர்த்தந்திர ரீதி யான ஒற்றுமை அல்லது தொடர்ச்சி காணா மல் விடப்பட்டது, அல்லது மறுதலிக்கப் பட்டது.

திட்டம் குறித்த அக்கறையின்மையையும் திட்டத்திற்கும் யுத்த தந்திரத்திற்கும் பாதைக்கும் உள்ள பொருத்தமின்மையையும் சுட்டிக் காட்டும் தோழர் பட்டாச்சார்யா திட்ட முயற்சிகள் 1951லும் 1970 லும் நடந்த தைக் குறிப்பிடுகிறார். 70 திட்டம் சில இடது குறுங்குழுவாத கீற்றுக்களை கொண்டிருந்தது என்று கூறி விடுதலைக் குழுவானது கடந்த மூன்று காங்கிரசுகள் மூலம் 1970இல் இட்ட அடித்தளத்தின் மீது ஒரு புரட்சிகர திட்டத்தை வளர்த்தெடுக்க முயலுவதாகக் கூறுகிறார். அடுத்து 1951 கொள்கை அறிக் கையையும், சி. பி. எம். திட்டத்தையும் விரிவாக விமர்சிக்கிறார். 70- திட்டத்தில் விடுதலைக்குழு ஏற்படுத்திய மாற்றங்களுக்கும் சி. பி. எம் திட்டத்திற்கும் கீழ்வருமாறு ஒப்பீடு செய்கிறார்.

''இந்த விவாதத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் சி. பி. அய் (எம்) சி.பி.அய் ஆகிய கட்சிகளிலிருந்து நமது (விடுதலை குழுவின்) திட்டம் செயல்தந்திரம் ஆகியவற்றிலுள்ள கீழ்க்கண்ட முக்கியமான வேறுபாடுகளுக்கு நாம் அழுத்தம் கொடுப் போம்.

1) நமது திட்டம் இந்தியாவில் புரட் சிக்கு முழுமையான முதன்மையிடத்தை அளிக்கிறது. இது நாம், பாட்டாளிவர்க்க சுதந்திரத்தன்மை மற்றும் தீவிரமான செயல் வீரம், இடதுசாரியின் சுதந்திரமான அறுதி யிடல் மற்றும் முன்முயற்சி ஆகியவற்றை தொடர்ந்து முன்வைக்க அடிப்படை உந்து சக்தியாக இருக்கிறது. பாராளுமன்றபோராட் டங்களில் இது நமது புரட்சிகரமான எதிர்ப்பு வழி என்பதிலும், பரந்துபட்ட, பாராளு மன்றத்திற்கு அப்பாற்பட்ட சூழலில் நாம் புரட்சிகர மாற்றுகளைத்தேடுவதிலும் வெளிப் படுகிறது. இந்த ஒன்றிணைந்த புரட்சிகர தொலை நோக்கை உட்கிரகித்துக் கொள்வது



படிப்பகம்

www.padippakam.com

என்பது. கம்யூனிஸ்ட் கட்சியை வெறும் நிர்ப்பந்தக் குழுவாக குறைப்பதற்கு இட்டுச் செல்லும் தாராளவாத, திரிபுவாத (சமூக—ஜனநாயக) தொலைநோக்குகளுக்கு எதிரான மிக முக்கியமான பாதுகாப்பு ஆகும்.

2) நிலப்பிரபுத்துவ மற்றும் காலனி ஆதிக்க மிச்ச சொச்சங்களின் நெகிழ்வற்ற தாங்கும் தன்மைகள்குறித்து நமது திட்டம் விழிப்புடன் இருக்கிறது. அதேநேரத்தில் இந்திய வகையிலான முதலாளித்துவத்தின் மீதும் அது போர்ப் பிரகடனம் செய்கிறது. புரட்சியை எந்த ஒரு இறுக்கமான குறுகிய வரையறைக்குள்ளும் நிறுத்துவதை நாம் எதிர்க்கின்றோம். இதைப்பொறுத்தவரை, எந்த ஒரு இயக்க மறுப்பியல் அல்லது கொத்திப் பொறுக்கும் அணுகுமுறையும், தாராளவாதம் / அழிவுவாதம் முதல் குறுங் குழுவாதம் / அராஜகவாதம் வரையிலான பல்வேறு தத்துவார்த்த அரசியல் வழி விலகல் களுக்கு இட்டுச் செல்லும்.

3) பாட்டாளிவர்க்க சர்வ தேசியத்தின் உறுதியான முன்னணி வீரர்களாகிய நாம் தேசிய வெறி வாதத்தின், அதன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பின்னணிகள், அம்சங் கள், ஆகியவற்றின் அறிவிக்கப்பட்ட எதிரியா வோம். இது பல்வகைப்பட்ட கொச்சை யான ஏகாதிபத்திய எதிர்ப்பு மற்றும் வால் பிடிப்பது போன்றவற்றிற்கு எதிராக நமது அரசியல் மற்றும் தத்துவார்த்த சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு நமக்கு ஏதுவாக இருக் கிறது.

4) நமது திட்டமானது அரசு மற்றும் சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் ஜன நாயகப் பதாகையை வீரத்துடன் தொடர்ந்து உயர்த்திப் பிடிக்கிறது. இருப்பினும் ஜனநாயகத்திற்கான நமது அர்ப்பணிப்பு என்பது ஜனநாயகமே எல்லா பிரச்சனை களுக்கும் தீர்வு என்ற தாராளவாத மாயை யில் வேரூன்றி இல்லை. கம்யூனிஸ்ட்டுகள் என்றவகையில் நாம் வர்க்கப் போராட்டத் தின் முக்கியத்துவத்திலும், அதன் இறுதி/ உச்சகட்ட வலிமையிலும், நம்பிக்கை கொண்டிருக்கின்றோம். ஜனநாயகம் என்பது வர்க்கப் போராட்டம், சுதந்திரமான, பரந்த அளவில் வேகமாக வளர்வதற்கான சிறந்த சூழ்நிலையை அளிக்கிறது என்பதையும் நம்புகின்றோம்.

5) அரசியலில் நாம், மக்களுடைய வலிமை, முன்முயற்சி, ஈடுபாடு ஆகியவற் றிற்கு முழுமையான முக்கியத்துவம் கொடுக் கின்றோம். இது மட்டுமே அதிகார வேட்டை, கொள்கையற்ற கூட்டணி, சந்தர்ப்பவாத சரிகட்டல்கள் ஆகியவற்றிற்கெதிராக கோட்டைபோல் சேவை செய்யும். சி.பி. அய் (எம்) மற்றும் சி.பி.அய் ஆகிய கட்சிகளைப் பொறுத்தவரை பொருளாதார போராட்டம் அரசியல் போராட்டம் ஆகியவற்றினிடையே ஒரு சீனப்பெருஞ்சுவரை எழுப்பி இருக்கின் றார்கள். அவர்கள் பொருளாதார போராட் டங்களுக்கும் உடனடி நிவாரணம் அல்லது அற்ப சீர்திருத்தங்கள் ஆகியவற்றுக்கான போராட்டத்திற்கும் தான் மக்கள் தகுதி யுடையவர்கள் என்று நினைக்கின்றார்கள். 'அரசியல்' என்பதை கட்சிக்காக ஒதுக்கி யிருக்கின்றார்கள். இது அவர்களுடையதை போன்ற அரசியலில் இருந்து தீவிரம் மற்றும் உயிர்துடிப்புள்ள தன்மையை களவாடிச் செல்கிறது. தீவிரமும், உயிர்துடிப்புள்ள தன்மையும் மக்களுடையை அதிகாரத்திற்கான, சமூக மாற்றத்திற்கான மக்கள் அரசியலில் மட்டுமே வரமுடியும்''

## மூன்றாவது சாட்சி தோழர் A.M.K.

மூன்றாவதாக சாட்சியம் அளிப்பவர், முதுபெரும்தோழரும், முதல் மையக்குழுவின் உறுப்பினரும், இ. க. க (மா.லெ, ம.யு) போல்சுவிக் குழுவின் தலைவரும் ஆன தோழர் ஏ. எம். கோதண்டராமன் ஆவார். போல்சுவிக் குழு 1988இல் நடத்திய சிறப்புக் கூட்ட ஆவணத்திலிருந்து விஞ்ஞான பூர்வ திட்டத்தின் தேவையை குறிப்பிடும் சில பகுதிகள் தொகுத்து அளிக்கப்படுகின்றன.

''இன்று, திட்டம் யுத்ததந்திரம், செயல் தந்திரக் கோட்பாடுகளை வகுத்தல், அமைப் புத்துறைக் கோட்பாடுகளை வகுத்தல் ஆகிய துறைகளில் ஒரு சித்தாந்தப் போராட்டத் தின் மூலமாக சரியான மார்க்சிய— லெனினி யத் தத்துவத்தையும், கோட்பாடுகளையும். நிலைப்பாடுகளையும் வகுப்பதே முதன்மை யான பணியாக இருக்கின்றது''



படிப்பகம்

www.padippakam.com

''மேற்குறித்த மூன்று பணிகளையும் [(1) கட்சி கட்டும் முறையும், முன்னணிகளை வென்றெடுத்தலும் (2) தலைமை முறை வழங்குதல் (3) யுத்ததந்திர, செயல்தந்திர கோட்பாடுகளை வகுத்தல், ஒரு அரசியல் நடத்தை வழியை தீர்மானித்தல் போன்றவை-எல்ஜியெஸ் குறிப்பு] செய்யாததால் தத்துவப் பணியையும், திட்டப் பணியையும் வரையறுத்து வைத்துக் கொண்டு தீர்க்கும் பயிற்சியில்லை. மா. லெ. கட்சி துவங்கிய போது இப்பணியின் முக்கியத்துவத்தை உணரவும் இல்லை. சி. பி. எம்.மிலிருந்து வெளியேறிய புரட்சியாளர்களிடம் திரிபுவாதம் மீதான கடுங்கோபம் பாராளுமன்றப், பாதை மீதான வெறுப்பு, அமைதிவழி மாற்றத்தை நிராகரித்து ஆயுதப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றல் என்ற கோட்பாட்டை யுத்த தந்திர ரீதியில் அன்றி செயல்தந்திர ரீதியில் புரிந்து கொண்டதுடன், செயல்தந்திரக் கோட்பாட்டு புரிதலுமின்றி உடனடி ஆயுதப் போராட்டம் என்ற அவசரவாதம் ஆகியவையே நமக்கிருந்தன. தன்னியல்பு சிந்தனையுடன் கோட்பாட்டு ரீதியில் கணக்கு தீர்த்துக் கொள்ளாததால் பொருளாதார வகைப்பட்ட தன்னியல்பிலிருந்து வேகமாக பயங்கரவாத வகைப்பட்ட தன்னியல்பிறகு சென்றோம்.''

''உலகப் பொது போக்கு என்ற விதத்தில் இந்தியா அரைக்காலனி, அரை நிலப்பிரபுத்துவ நாடே என கோட்பாட்டளவில் முடிவு கட்டியதுடன், உலக, இந்திய புறநிலைமை பற்றி ஆய்வு செய்தல், இந்திய சமூக வளர்ச்சி பற்றிய விதிகளையும், தனித்தன்மைகளையும் புரிந்து கொள்தல், இவற்றிலிருந்து இந்தியப் புரட்சியின் விஞ்ஞான பூர்வமான வேலைத் திட்டத்தையும் யுத்ததந்திரக் கோட்பாடுகளையும் வரையறுத்தல் போன்ற பணிகள்புறக்கணிக்கப்பட்டன. நடைமுறையே தலைமை என்ற கோட்பாடு சித்தாந்தமாக உருவாயிற்று. தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறையும் கூட தத்துவப் பணியின் முக்கியத்துவத்தை மேலும் குறைப்பதாகவே இருந்தது. மக்கள் யுத்தக் குழுவிலும் சாராம்சத்தில் இப்படித்தான். தன்னியல்பு நடைமுறையிலிருந்து முறித்துக் கொள்ள வேண்டுமென திட்டவட்டமான கோட்பாடாக உணரப்பட்ட பின்பே சமூகப் பொருளாதார ஆய்வின் அவசியமும் வேலைத் திட்டத்தை துல்லியமாக உருவாக்குதல் உட்பட பிற தத்துவப்பணிகளின் முக்கியத்துவமும் உணரப்பட்டன.''

''இன்று இத்துறையில் தீர்க்க வேண்டிய பிரச்சினைகள்:

1. சர்வதேசிய உற்பத்தி உறவுகள் பற்றிய ஆய்வு. வல்லரசுகள் தோன்றிய போதிலும் இதுவும் ஏகாதிபத்திய சகாப்தமே. லெனினியக் கோட்பாடுகள் பொருந்தும். எனினும் இன்றைய ஏகாதிபத்திய உற்பத்தி முறையின் போக்குகளும் அதன் விளைவாக காலனியக் கொள்கைகளில் எழுந்துள்ள மாற்றங்களும் பற்றிய ஆய்வு, இன்றைய உலக முரண்பாடுகள், நவகாலனீயம் பற்றிய கோட்பாடு, ஏகாதிபத்தியம் முன்னாள் காலனி நாடுகள் மீது அரசியல் ஆதிக்கமும் செலுத்துகிறதா, பொருளாதார ஆதிக்கம் மட்டுமா, காலனியாதிக்கம் மிச்ச சொச்சங்களாகி விட்டதா போன்ற கேள்விகள் தீர்த்தல். சர்வதேச நிதி மூலதன உறவும் வர்க்க அணி சேர்க்கையும், மூன்றுலகக் கோட்பாடு அல்லது இன்றைய உலகப்புரட்சியின் செயல்தந்திரக் கோட்பாடு பற்றி.

2. டெங் திரிபுவாதம், நவீன இடதுகள் உட்பட உலகெங்கும் மார்க்சியத்தில் தோன்றியுள்ள திரிபுகள் அல்லது புறம்பான சித்தாந்தங்களை முறியடித்தல், மார்க்சியத்தை பாதுகாத்தல், மார்க்சியம்-லெனினியத்தின் வளர்ச்சியாக மாசேதுங் சிந்தனையை மதிப்பிடுதல்.

3. உள்நாட்டு உற்பத்தி உறவுகள் பற்றிய ஆய்வு, இந்தியாவின் தனித்தன்மைகளை வரையறுத்தல், இந்திய சமூக வளர்ச்சியின் பொது விதிகளை அறிந்திருந்த போதிலும் அவற்றின் குறிப்பான தன்மைகளைக் கண்டறிதல், இந்திய சமூகத்தின் அடிப்படை முரண்பாடுகளையும் முதன்மை முரண்பாட்டையும் இனம் காணல், தரகு முதலாளித்துவம் வரையறை. நிலவுடமை உறவுகளில் நிகழ்ந்துள்ள மாற்றம் இவற்றிற்கும் ஏகாதிபத்தியத்திற்குமான உறவு. பொதுவாக



படிப்பகம்

www.padippakam.com

இந்திய சமூகப் பொருளாதார படிவத்தின் பரிணாம வளர்ச்சிப் போக்கு.

4. இந்திய அரசமைப்பு பற்றிய ஆய்வு, அதன் தனித் தன்மைகள், கட்டுமானம், ஏகாதிபத்திய அமைப்புடன் அரசுக்கு உள்ள உறவு ஆளும் வர்க்கத்திற்கு அரசியல் சுதந்திரம் உண்டா, எந்த வர்க்கத்தின் ஆட்சி, ஆட்சிமுறை, அதில் நிகழும் மாற்றங்கள், இந்திய அரசமைப்பு முறையில் எழும் தேசிய இனப் பிரச்சினை—இவை பற்றிய ஆய்வு.

மேற்கூறியவையே நாம் முக்கியமாக மார்க்சியத் தத்துவத்தின் துணைகொண்டு பூர்த்தி செய்ய வேண்டிய தத்துவப் பணிகளாகும்.

இத்தகைய தத்துவப் பணியை மா.லெ கட்சி செய்யத் தவறியது. அரைக்காலனி, அரைநிலப்பிரபுத்துவம் என முடிவு கட்டிய தன் பின் மேற்கொண்டு இந்தியப் புரட்சியின் தனித்தன்மையான விதிகளை ஆய்வு செய்யாமல் புரட்சிக்கு முந்திய சீனத்தின் நிலைமைகள் அப்படியே நிலவுவதாக கருதிக் கொள்ளப்பட்டது. நீண்ட மக்கள் யுத்தப் பாதையின் சீன வடிவம் அப்படியே இங்கும் மேற்கொள்ளப்பட்டது. இந்த அணுகுமுறை தத்துவத் துறையில் வறட்டுவாதம், அனுபவ வாதம் ஆகிய சித்தாந்தங்களை ஒரு முறையியலாகப் படியச் செய்தது. இரண்டும் புற நிலையைப் பார்க்க மறுத்து அகவயமாக முடிவிற்கு செல்லுகிற அகநிலை வாத சிந்தனை முறைகளை தோற்றுவித்தன. வெவ்வேறு ரகத்திலான அகநிலைவாதம் மா.லெ. ஊழியர்களிடம் பரவலாக படிந்தது. இதற்கிணையாக அமைப்புத் துறையில் குறுங்குழுவாத சித்தாந்தம் வேரூன்றியது.''

''இந்திய பாட்டாளி வர்க்கத்தின் குறிக்கோள்களை துல்லியமாக முறைப்படுத்தும் திட்டத்தை உருவாக்குவதற்கான போதிய தத்துவப்பணி ஆற்றப்படவில்லை; மாறாக சீனப் புரட்சியின் நிலைமைகள் அப்படியே இங்கிருப்பதாக கருதிக் கொள்ளப்பட்டது''

''மா. லெ. கட்சி கட்டிய விதம் முன்னணிப் புரட்சியாளரை தத்துவம், வேலைத் திட்டம் இவற்றைப் போதித்து ஏற்கச் செய்து, மார்க்சிய-லெனினிய அரசியல் கோட்பாடுகளை கிரகிக்கச் செய்து பாட்டாளி வர்க்க சித்தாந்தத்தை பலப்படுத்தும் விதமாக இருக்க வில்லை. மாறாக, ஆயுதப் போராட்டத்தின் மூலம் கட்சி கட்டுதல் எனத் துவங்கப்பட்டது. இப்போக்குகள் 1970, கட்சி மாநாட்டிற்கு முன்பே துவங்கி விட்டன. இப்போக்குகளின் முத்தாய்ப்பாகவே மாநாடு நடக்கிறது. எனவே அது பிளவின் துவக்கமாகும்.''

''வேலைத் திட்டம் உருவாக்குவது தத்துவத்துடனும், உலகப் புற நிலைமையுடனும் கூட தொடர்புடையதே. எனவே சர்வதேச தத்துவ நிலைகள், உலக புறநிலை பற்றிய மதிப்பீடு, புரட்சிகரமான வேலைத் திட்டம், சர்வதேசிய வர்க்கப் போராட்ட வழி, இந்தியப் புரட்சியின் அரசியல், இராணுவப் பொதுப்பாதையும் அதற்கான கோட்பாடுகளும், ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடு, அரசியல் நடத்தை வழி இவற்றில் ஒற்றுமையை சாதிக்க வேண்டும். இவற்றுள் சர்வதேச தத்துவ நிலைகளும், வேலைத் திட்டமும் அடிப்படையானவை.''

மேற்கூறியவாறு சர்வதேச தத்துவ நிலைகளும் வேலைத்திட்டமும் அடிப்படையானது என்று பத்தாண்டுகளுக்கு முன்னர் வரையறுத்து கூறிய தோழர் A.M.K.வும் போல்சுவிக் குழுவினரும் இதில் ஒரு அங்குலம் கூட முன்னேறிச் செல்லவில்லை என்பது வேறு விசயம். அது ஒரு சோகக் கதை.

(தொடரும்)

---

ஒரு குறிப்பிட்ட புறநிலை நிகழ்ச்சிப் போக்கு முன்னமேயே ஒரு வளர்ச்சிக் கட்டத்திற்கு முன்னேறி மாறுதல் அடைந்து விட்ட பிறகு, அதற்கேற்றாற் போல் தாமும் தமது சகப் புரட்சியாளர்கள் அனைவரும் தங்களுடைய அகநிலையான அறிவை வளர்த்து முன்னேற்றி யாற்றிக் கொள்வதில் புரட்சியாளர்கள் சிறந்து விளங்க வேண்டும்.

— மாவோ



படிப்பகம்

www.padippakam.com

# விவசாயிகளின் வர்க்கப் போராட்டத்திற்கான திசை வழி குறித்த அணுகுமுறை

—சோலையப்பன்.

சென்ற இதழ் தொடர்ச்சி

விவசாயத் திட்டம் பற்றிய கட்டுரை தொடர் கட்டுரையாக வெளிவருவதில் பொதுவுடைமையின் வாசகர்கள் சிலரிடையே விமர்சனங்கள் எழுந்துள்ளன. பகுதி பகுதியாக வெளிவருவதனால் கருத்துக்களை கோர்வையாக பார்க்க முடியாமல் இருப்பதாக கருதுகின்றனர். கட்டுரைகள் பகுதி பகுதியாக வெளிவந்தாலும் கூட ஒவ்வொரு பகுதியும் ஒரு முழுமையான பொருளை வாசகர்களுக்கு தரக் கூடிய விதத்திலேயே அமைந்துள்ளது. தனித்தனியாகவும் படிக்கலாம். ஒன்று சேர்த்து ஒரே முழுமையாகவும் பார்க்கலாம். விவரங்களிலிருந்து திட்டங்களையும், கொள்கைகளையும் உருவாக்கிக் கொள்வது என்பது மார்க்சிய-லெனினிய முறையாகும். அதற்காக சற்று விரிவான முறையில் விளக்கமளிக்க வேண்டியுள்ளது. இந்தியப் புரட்சியின் விதிகளை சரியாகப் புரிந்து கொள்ளாமையால் தான் இந்தியப் புரட்சியில் முன்னேற்றத்தைக் கொண்டு வர இயலவில்லை. புரட்சிகரத் தத்துவம் இல்லையென்றால் புரட்சிகர இயக்கம் இருக்க முடியாது. மார்க்சியம் வறட்டுச் சூத்திரமாக இல்லாமல் செயலுக்கான வழி காட்டியாக இருக்க வேண்டுமானால் இயங்கிக் கொண்டும் மாறிக் கொண்டும் இருக்கும் இந்திய நிலைமைகளை ஆராய வேண்டும். நமது கொள்கைகளும், திட்டங்களும் மக்களின் தேவைகளோடு பொருந்துவதாக இருக்கவேண்டும். அதற்கு புறநிலையான ஆய்வு சரியாக இருத்தல் அவசியம். விவசாய நெருக்கடியைப் புரிந்து கொள்வதற்கு விவசாயப் பொருளாதாரத்தை ஆராய வேண்டும். ''தற்போதைய பொருளாதார அமைப்பின் அடிப்படைக் கூறுகளைப் பற்றியும் அதனுடைய வளர்ச்சியைப் பற்றியும் மதிப்பீடு செய்வதே வேலைத் திட்டத்தின் முக்கியமான கருத்தாகும் எனக் கூறுகிறார் லெனின்.

''நிலப்பிரபுத்துவத்துக்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான முரண்பாடு பிரதான முரண்பாடு'' எனவும், ''உழுபவனுக்கே நிலம் சொந்தம்'' என்பதே விவசாயப் புரட்சியின் மைய முழக்கம் என 70 ஆம் ஆண்டு திட்டம் கூறுகிறது. சில புரட்சியாளர்கள் ''விவசாய உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளுக்கு மான்யங்களை வழங்கு'' எனக் கூறி விவசாய—நெருக்கடியை தீர்க்க முயல்கின்றனர். இவைகள் புறநிலையான ஆய்வின் அடிப்படையில் முன்வைக்கப் பட்டவை அல்ல. புதிய ஜனநாயகப் புரட்சி, விவசாயப் புரட்சி எனக் கூறுவதால் சீனப் புரட்சியின் விதிகளைக் கொண்டே இந்தியப் புரட்சி இயங்கும் எனக் கருதி செயல்பட்டதானது, செருப்புக்குத் தகுந்தாற்போல் கால்களை வெட்டிக் கொண்ட நிலைமையே ஏற்பட்டுள்ளது. இந்தியாவின் புதிய ஜனநாயகப் புரட்சி, விவசாயப் புரட்சி இந்திய விதிகளைக் கொண்டே இயங்கும்.

விவசாயிகளின் வர்க்கப் போராட்டத்தை ஒழுங்கமைக்க வகை செய்யும் விவசாயத் துறை வேலைத்திட்டம் தொடர்பான கட்டுரையில் இதுவரை மூன்று பகுதிகள் வெளிவந்துள்ளன. அவற்றில் உள்ள சாராம் சமான விசயங்களை சுருக்கமாகப் பார்ப்போம். முதல் பகுதியில் (பொதுவுடைமை-2) கிராமப்புற வர்ககப் போராட்டம் தொடர்பாக பாட்டாளி வர்க்கக் கட்சி பின்பற்ற வேண்டிய வழிமுறை குறித்து மா. லெ. கருத்துக்கள் முன்வைக்கப் பட்டன.



படிப்பகம்

www.padippakam.com

1. விவசாயப் புரட்சி ஜனநாயகப் புரட்சியின் அங்கம்; விவசாயப் புரட்சி கிராமப்புறத்தை அரை நிலவுடைமை அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை செய்யும்.
2. கிராமப்புறத்தில் இருவகை முரண்பாடுகள் நிலவுகின்றது. ஒன்று, விவசாயத் தொழிலாளர்களுக்கும் உடைமை வர்க்கங்களுக்கும் இடையே உள்ள முரண்பாடு. மற்றொன்று, ஒட்டுமொத்த விவசாயிகளுக்கும் ஒட்டுமொத்த நிலப்பிரபுக்களுக்கும் இடையேஉள்ள முரண்பாடு.
3. கிராமப்புற பாட்டாளிகள்உடைமை விவசாயிகளோடு சேர்ந்து நிலப்பிரபுவர்க்கம் மற்றும் அரசுக்கெதிராக போராடுவது; கிராமப்புற பாட்டாளிகள் நகர்ப்புறபாட்டாளிகளோடு சேர்ந்து முதலாளிகளுக்கும் மற்றும் உடைமை விவசாயிகளுக்கும் எதிராகப் போராடுவது.
4. மூலதனத்தின் தாக்குதலில் இருந்து சிறுவுடைமைகளையும், சிறுவீத உற்பத்தியையும் பாதுகாப்பது சமூக வளர்ச்சிக்கு தடையானது.சோசலிச அரசால் மட்டுமே விவசாயிகளின் பிரச்சனையைத் தீர்க்க முடியும்.
5. சிறு விவசாயிகளின் நிலத்தை பலாத்காரமாக பறிமுதல் செய்யக்கூடாது. நடுத்தர மற்றும் சிறு விவசாயிகளை அழிவில் இருந்து காப்பாற்ற கூட்டுறவு விவசாயம், கூட்டு உடைமை என ஆக்கவேண்டும்.
6. கிராமப்புற பாட்டாளிகள் மிகவும் புரட்சிகரமானவர்கள், அவர்களை தனி அமைப்பில் திரட்ட வேண்டும்; அவர்களின் வர்க்க உணர்வை உயர்த்த வேண்டும்.
7. மக்களுக்கு முழு சுதந்திரம் எனப்படுவது, மக்கள் அதிகார வர்க்கத்தினருக்கு கீழ்ப்பட்டு இருப்பதல்ல, மாறாக மக்களுக்கு கீழ்ப்பட்டு அதிகார வர்க்கத்தினர் சேவை செய்வதாகும்.
8. விவசாயிகளின் எழுச்சியின் மூலம் தான் நிலங்களை கைப்பற்றவும் ஜனநாயக குடியரசு அமைக்கவும் வேண்டும் - ஆகிய கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

இரண்டாவது பகுதியில் (பொதுவுடைமை-3) (1) இந்திய நிலவுடைமை சமூக அமைப்பானது கிராம சமுதாயங்களின் சுய தேவையை அடிப்படையாகக் கொண்ட விவசாயப் பொருளாதாரமாக இருந்தது. (2) நிலம் விற்கவும் வாங்கவும் முடியாத நிலைமை இருந்தது. (3) பிரிட்டிசார் ஆட்சியில் ஜமீன்தாரி, ரயத்துவாரி, மகல்வாரி எனப்படும் நிலவுரிமை முறை ஏற்படுத்தப்பட்டது. 57 சதவீத நிலங்கள் ஜமீன்தாரி முறையின் கீழும், 38 சதவீத நிலம் ரயத்துவாரி முறையின் கீழும், 5 சதவீத நிலம் மகல்வாரி முறையின் கீழும் குத்தகைக்கு விடப்பட்டது. (4) அரசுக்கும் விவசாயிகளுக்கும் இடையில் ஜமீன்தாரர்கள் இடைத்தரகர்களாக செயல்பட்டனர். ஜமீன்தாரர்களுக்கு நிலத்தின் மீது உரிமை அளிக்கப்பட்டதால் ஜமீன்தாரியை விற்கவும் வாங்கவும் நிலைமை உண்டானது. இதனால் நிலச் சந்தை உருவானது. ஜமீன்தார்களும், நிலப்பிரபுக்களும், வாடகை வசூலிப்பவர்களும் விவசாயிகளை கடுமையாக சுரண்டினார்கள். (5) பிரிட்டிஷ் ஆட்சியின் பிற்காலத்தில் பயிரிடக் கூடிய நிலங்களில் 75 சதவீதம் பல்வேறு வகையான குத்தகை முறையின் கீழ் இருந்தன. 1950-51 ஆம் ஆண்டில் 35.7 சதவீதம் குத்தகை முறையில் இருந்தது.

(6) 1947-க்குப் பிறகு இந்திய அரசு இடைத்தரகர் முறையை அகற்றிவிட்டு சாகுபடியாளர்களை நேரடியாக தன்கீழ் கொண்டு வந்தது. நிலச் சீர்திருத்தத்தை பகுதியளவு அமுல்படுத்தியது. (7) சுய சாகுபடி செய்வது என்ற பெயரில் அதிக அளவு நிலங்களை நிலப்பிரபுக்கள் வைத்துக் கொண்டனர். குத்தகை சீர்திருத்தம், நில



படிப்பகம்

www.padippakam.com

உச்சவரம்புச் சட்டம் போன்றவை விவசாயிகளுக்கு அதிகம் பயன்படவில்லை. (8) நிலமற்ற விவசாயிகளின் எண்ணிக்கை வேகமாக பெருகியுள்ளது. (9) 1947-க்கு முன்பு செல்வந்தர்களாக இருந்த அதே பிரிவினரிடம் தான் சமூக, பொருளாதார, அரசியல் அதிகாரம் தற்போதும் இருந்து வருகிறது. நிலச்சீர்திருத்தம் நிலவுடைமையாளர்களின் நலன்களுக்கு கடுமையான ஆபத்தினை உண்டாக்கவில்லை — ஆகிய கருத்துக்களை முன்வைத்திருந்தோம்.

மூன்றாம் பகுதியில் (பொதுவுடைமை-4இல்) இந்திய அரசாங்கம் பின்பற்றிய இடைத்தரகர் முறையை ஒழித்தல் மற்றும் நில உச்ச வரம்பு போன்ற நிலச்சீர்திருத்த கொள்கைகளினால் நிலவுடைமைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 1950-51 ஆம் ஆண்டில் 35.7 சதவீதம் நிலங்கள் குத்தகை முறையின் கீழ் இருந்தன. தற்போது 8 சதவீதம் மட்டுமே குத்தகை முறையின் கீழ் உள்ளது, 92 சதவீத நிலங்கள் சொந்தஉடைமையாகவும் அவர்களாலேயே பயிர் செய்யக் கூடியதாகவும் உள்ளது. 1982 ஆம் ஆண்டில் ஒரு ஏக்கருக்கும் குறைவாக நிலம் உடைய 50 சதவீத குடும்பங்களுக்கு மொத்த விவசாய நிலத்தில் 3 சதவீதத்துக்கும் குறைவான நிலமே சொந்தமாக உள்ளது. 10ஏக்கருக்கும் குறைவாக உள்ள 92 சதவீத குடும்பங்களின் பங்கு மொத்த நிலத்தில் 52 சதவீதமாகும். 10 ஏக்கருக்கும் அதிகமாக உள்ள மேல்மட்ட 8 சதவீத குடும்பங்களுக்கு 48 சதவீத நிலங்கள் சொந்தமாக உள்ளது. நிலமற்ற விவசாய குடும்பங்கள் 1953-54 இல் 23.09 சதவீதமாகவும் 1982 இல் 11.33 சதவீதமாகம் இருந்தது. நில விநியோகம் மிகவும் ஏற்றத்தாழ்வான முறையில் நிலவுகின்றன. கூலி ஏழை விவசாயிகள் மிக மோசமான வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்- ஆகிய விசயங்களை உள்ளடக்கி உள்ளன.

அடுத்து— இந்த இதழில்- விவசாய உற்பத்தியிலும் உற்பத்தி சக்திகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்துப் பார்ப்போம்.

## விவசாய உற்பத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்:

1950-51 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி (G D P) ரூ 42, 544 கோடியாகும். 1995-96 ஆம் ஆண்டில் அதாவது 45 ஆண்டுகளில் ரூ 2,67, 330 கோடியாக உயர்ந்துள்ளது. நாட்டின் பொருளாதாரம் 6 மடங்காகி உள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (G D P) விவசாயத்தின் பங்கு 1950-51 இல் 56 சதவீதமாகும். 1995-96இல் 29 சதவீதமாக உள்ளது. தொழில்துறை (Manufacturlng) 1950-51 இல் 15 சதவீதத்திலிருந்து 95-96 ஆம் ஆண்டில் 29 சதவீதமாக உயர்ந்துள்ளது. சேவைத்துறை (வர்த்தகம் போக்குவரத்து, நிர்வாகம்,பாதுகாப்பு) 1950-51இல் 29 சதவீதத்தில் இருந்து 95-96 இல் 42 சதவீதமாக உயர்ந்துள்ளது.

விவசாயத்துறை உற்பத்திப் பொருட்களில் அதிகரிப்பு காணப்படுகிறது. உற்பத்தி முறையிலும் மாறுதல் ஏற்பட்டுள்ளதால் உற்பத்தித் திறன் அதிகரித்துள்ளது. உணவு தானிய உற்பத்தி 1950-51 இல் 50.8 மில்லியன் டன்களாக இருந்தது. 1996-97 ஆம் ஆண்டில் 198 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது. இவற்றில் அரிசி உற்பத்தி 1950-51 இல் 20.6 மி. டன்களாக இருந்தது. 95-96 இல் 79.6 மி. டன்களாக அதிகரித்துள்ளது. கோதுமை 1950-51 இல் 6.5 மி. டன்னாக இருந்தது. 95-96-ல் 62.6 மி. டன்னாக உயர்ந்துள்ளது. எண்ணெய் வித்துக்கள் 1950-51 இல் 5,2 மில்லியன் டன்னாக இருந்தது. 95- 96 இல் 22.4 மி. டன்னாக உயர்ந்துள்ளது. கரும்பு உற்பத்தி 1950-51 இல் 57. மி. டன்னாக இருந்தது. 95-96 இல் 282.9 மி. டன்னாக உயர்ந்துள்ளது. பயறுவகைகள் 8.4 மி. டன்னிலிருந்து 13.2 மி. டன்னாக உயர்ந்துள்ளது. சிறு தானியங்கள் 15.4 மி. டன்னில் இருந்து 29.6 மி. டன்னாக உயர்ந்துள்ளது. தோட்டப் பயிர்களான தேயிலை, காப்பி, ரப்பர், பருத்தி, சணல் போன்றவற்றின் உற்பத்தியும் அதிகரித்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

உற்பத்தித் திறன் : உணவு தானியங்களின் உற்பத்தித் திறனிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. 1950-56 இல் ஐந்து ஆண்டு சராசரியாக ஒரு எக்டேருக்கு 582 கிலோ கிராம் விளைந்தது. 1960-65இல் 708 கிலோவும், 1970-75 இல் 839 கிலோவும், 1980-85 இல் 1080 கிலோவும், 1995-96இல் ஒரு எக்டேருக்கு 1499 கிலோவும் விளைந்தது. 1950-51 இல் 22. 6 மி. எக்டேர் நிலங்கள் பாசனவசதி பெற்றிருந்தது. 95-96 இல் 79.9 மி எக்டேர் நிலங்கள் பாசனவசதி பெற்றுள்ளது. உரத்தின் பயன்பாடும் அதிகரித்துள்ளது. 1950-51 இல் 0.07 டன் நவீன உரம் பயன்படுத்தப்பட்டது. 1970-71 இல் 2.2 மி. டன்களும், 1980-81 இல் 5.5 மி. டன்களும், 1995-96 இல் 13.9 மி. டன் உரங்களும் விவசாயத்திற்குப் பயன் படுத்தப்பட்டது.

நிலத்தின் பரப்பளவு அதிகரித்தல் : சாகுபடி செய்யும் நிலத்தின் பரப்பளவு கூட அதிகரித்துள்ளது. உணவு தானியங்கள் பயிர் செய்யும் மொத்த நிலத்தின் பரப்பளவு 1950-51இல் 97.3 மி. எக்டேர்களும், 1960-61இல் 115.6 மி. எக்டேர்களும், 1970-71 இல் 124.3 மி. எக்டேர்களும், 1980-81இல் 126.7 மி. எக்டேர்களும், 1990-91 இல் 127.8 மி. எக்டேர்களாக உயர்ந்துள்ளது. அரிசி விளையும் பரப்பளவு 1950-51 இல் 30.8 மி. எக்டேரிலிருந்து 1990-91 இல் 42.7 மி. எக்டேர்களாக உயர்ந்துள்ளது. கோதுமை விளையும் நிலத்தின் பரப்பளவு 1950-51 இல் 9.8 மி. எக்டேர்களாக இருந்தது. 1990-91இல் 24.2 மி. எக்டேர்களாக உயர்ந்துள்ளது. பயறு வகைகள் 1950-51 இல் 19.3 மி எக்டேர் பரப்பிலும், 1990-91இல் 24.7 மி எக்டேர் பரப்பிலும் பயிர் செய்யப்பட்டன. எண்ணெய் வித்துக்கள் 1950-51இல் 10.7 மி எக்டேர்களிலும், 1990-91 இல் 24.1 மி எக்டேர்களிலும் பயிர் செய்யப்பட்டன. கரும்பு 1950-51இல் 1.7 மி எக்டேர் நிலத்திலும், 1990-91 இல் 3.7 மி. எக்டேர் நிலத்திலும் பயிர் செய்யப்பட்டன.

பெரும்பாலும் உற்பத்தித்திறன் அதிகப்படுத்தியதன் விளைவாகவே உற்பத்தி அதிகரித்துள்ளது. மொத்த சாகுபடி பரப்பின் அளவு கூடியதன் விளைவாகவும் உற்பத்திச் சற்று கூடியுள்ளது. உதாரணமாக, மொத்த உணவு தானியங்கள் சாகுபடி செய்யும் பரப்பின் அளவு 30 சதவீதம் அதிகரித்துள்ளது. ஆனால் அதே சமயத்தில் மொத்த உணவு தானிய உற்பத்தி 250 சதவீதம் அதிகரித்துள்ளது. கோதுமையைப் பொறுத்தவரை மொத்த சாகுபடி பரப்பின் அளவு 150 சதவீதம் அதிகரித்துள்ளது. அதே சமயம் உற்பத்தியானது 750 சதவீதம் அதிகரித்துள்ளது. (இந்த உற்பத்தி திறனும் கூட வளர்ந்த நாடுகளைக் காட்டிலும் மிகக் குறைவானது ஆகும்)

பாசன வசதி : 1950-51 ஆம் ஆண்டில் 22.6 மி. எக்டேர் நிலங்கள் பாசனவசதி பெற்றிருந்தது. 1960-61 இல் 26 மி. எக்டேர் நிலங்களும், 1970-71இல் 38 மி. எக்டேர் நிலங்களும், 1980-81 இல் 54.1 மி. எக்டேர்களும் 1990-91இல் 70.8 மி. எக்டேர்களும், 1995-96 இல் 79.9 மி. எக்டேர்களும் பாசன வசதி பெற்றுள்ளன. பாசன வசதி பெற்றுள்ள நிலங்களின் சதவீதமானது. 1951இல் 17.1 சதவீதம் 1961 இல் 18.3 சதவீதம், 1971 இல் 23 சதவீதம், 1981 இல் 28.5 சதவீதம், 1985 இல் 29.9 சதவீதம் ஆகும்.

இயந்திர மயமாக்கல் : மொத்த டிராக்டர்களின் எண்ணிக்கை 1951 இல் 9 ஆயிரம் 1988 இல் ஒரு மில்லியனுக்கும் அதிகமாக உள்ளது. ஆயில் என்ஜின்கள் 1951 இல் ஒரு லட்சம் எக்டேர்களுக்கு 50 என்ற எண்ணிக்கையில் இருந்து 1988 இல 2400 ஆக உயர்ந்துள்ளது. மின்சார பம்புசெட்டுகள் ஒரு லட்சம் எக்டேர்களுக்கு 16 என்ற விகிதத்திலிருந்து 3484 ஆக உயர்ந்துள்ளது.

வர்த்தகம் : 1960-61 இல் விவசாயம் மற்றும் அதைச்சார்ந்த பொருட்களின் ஏற்றுமதி மொத்த ஏற்றுமதி வர்த்தகத்தில் 44.3 சதவீதமாக இருந்தது. தொழில் துறைப் பொருட்கள் (Manufactured Goods) 45.3 சதவீதமாக இருந்தது. 1995-96 இல் விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த பொருட்களின் ஏற்றுமதி 19.2 சதவீதமாகவும், தொழில்



படிப்பகம்

www.padippakam.com

துறை பொருட்களின் ஏற்றுமதி 75.4 சத வீதமாகவும் மாறியுள்ளது. விவாசயம் மற்றும் அதைச் சார்ந்த பொருட்களின் இறக்குமதி 1960-61 இல் 19.1 சதவீதத்திலிருந்து 1995-96 இல் 3.6 சதவீதமாக குறைந்து விட்டது.

உழைப்புச் சக்தி (work force): 1972-73 இல் நாட்டின் மொத்த உழைபபுச் சக்தியில் 74 சதவீதம் விவசாயத்துறையில் ஈடுபட்டனர். 1993-94 இல் 65 சதவீதமாகக் குறைந்துள்ளது.

தனிநபரின் உணவு தானிய அளவு: தனிநபர் ஒருவருக்கு கிடைக்கக் கூடிய உணவு தானியத்தின் அளவானது, 1951 இல் நாளொன்றுக்கு 400 கிராமுக்கு கீழாகவே இருந்தது. 1960 இல் 449.6 கிராமும், 1970 இல் 445 கிராமும், 1980 இல் 410.4 கிராமும் 1990 இல் 476.4 கிராமும் 1996 இல் 498 கிராம் ஆக உள்ளது. நாட்டின் உணவு தானிய உற்பத்தி நான்கு மடங்கு ஆகி உள்ளது. பொருளாதாரம் 45 ஆண்டுகளில் 6 மடங்கு பெருகியுள்ளது. தனிநபர் ஆண்டு வருமானம் 1950-51 இல் ரூ. 1127 ஆக இருந்தது. 1995-96 இல் ரூ. 2573 ஆக உயர்ந்துள்ளது. ஒன்னே கால் மடங்கு கூடியுள்ளது. இதே காலப்பகுதியில் விலைகள் 20 மடங்கு கூடியுள்ளது. விலை உயர்வினால் கிராமப்புற கூலி, ஏழை விவசாயிகளின் வாங்கும் சக்தி மிகவும் குறைந்து விட்டது. 50 சதவீதத்துக்கும் அதிகமான மக்கள் வறுமைக் கோட்டில் வாழ்கின்றனர். 53 சதவீதம் குழந்தைகள் சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். மக்கள் உயிர் வாழ்வதற்கு அவசியத் தேவையென நிபுணர்களால் பரிந்துரை செய்யும் கலோரி உணவின் அளவை விட குறைவாகவே நுகரப்படுகிறது.

விவசாயத்துறையில் அரை நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை எந்த மாறுதலுமின்றி இருந்து வருகிறதா, அல்லது முதலாளித்துவமயமாகி உள்ளதா என்பது பற்றியும், விவசாய உற்பத்தி வளருவதற்கு எத்தகைய தடைகள் உள்ளது, விவசாயிகளுக்கு எத்தகைய பிரச்சனைகள் உள்ளன, அவற்றை எவ்வாறு தீர்ப்பது என்பது பற்றியும் அடுத்த பகுதியில் விவாதிப்போம்.

(தொடரும்)

---

# மீண்டும் வேண்டாம் ஹிரோஷிமா - நாகசாகி

ஹிரோஷிமா-நாகசாகி மனித குலத்தின் அவலம். ஏகாதிபத்தியத்தின் வன்மம். இரண்டாம் உலகப் போர் முடிவுற்று, ஜப்பானும் சரணாகதி அடைந்த சமயத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியமானது அன்றைக்கு நிலவிய சோசலிச சோவியத் யூனியனையும், தேசிய இயக்கங்களையும் அச்சுறுத்தும் வகையில் ஹிரோசிமா- நாகசாகி மீது 'சிறுபையன்' என்று பெயரிடப்பட்ட அணுகுண்டு ஒன்றினை போட்டது. நொடிப் பொழுதில் இலட்சக் கணக்கான மனித உயிர்களை பலி கொண்ட அந்த அணுகுண்டு தாயின் கருவில் இருந்த சிசுக்கள் முதல் நிலம், நீர், காற்று அனைத்தையும் நஞ்சாக்கியது.

அமெரிக்க ஏகாதிபத்தியம் அணுகுண்டை வைத்துக் கொண்டு உலகப் போலீஸ் காரனாக அனைத்து நாடுகளையும் அச்சுறுத்திக்கொண்டு இருந்தமையால் உலக சோசலிச நாடுகள் கூட பாதுகாப்பு நோக்கத்திற்காக அணுகுண்டுகள் செய்தன. ஏகாதிபத்தியம் அணு ஆயுத யுத்தத்தை துவக்குவதை தடுக்கவும், முழுமையான அணு ஆயுதத் தடையை பெறவும் தங்களிடம் உள்ள அணு ஆயுதங்கள் உதவும் என நம்பின.

அணு ஆயுதத்தின் தீமைகளை உலகம் தொடக்கத்தில் புரிந்திருந்த போதிலும் அணு சக்தியை ஆக்கபூர்வமாக (மின்சாரம் தயாரிப்பு போன்றது) பயன்படுத்த இயலும் என்று நம்பியது. அணு மின் நிலையங்கள் உருவாக்கப் பட்டன. ஆனால் விஞ்ஞானம் கூட பின்னர் தான் அணு கழிவுகளை அழிக்க முடியாததையும். கதிரியக்கத்தை தடுக்க முடியாத



படிப்பகம்

www.padippakam.com

தையும் கண்டு பிடித்து உலகுக்கு அறிவித்தது. செர்னோபில் விபத்து உலகின் கண்களை திறந்தது, அதன் பின்னர் அணுகுண்டும் வேண்டாம். அணு மின்சாரமும் வேண்டாம் என்ற முழக்கம் உலகம் பூராவும் முழங்கத் தொடங்கியது. பல்வேறு அணு சோதனைகளாலும், தொழிற்சாலை கழிவுகளாலும் உலக வெப்பம் அதிகரித்து வருகிறது. ஓசோன் மண்டலத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டை, கருப்பு சந்து போன்றவை சுற்றுச்சூழல் பாதிப்பையும் மாசு படுத்தலையும் ஏற்படுத்தி உயிர்களே வாழ முடியாத நிலைக்கு பூமியை கொண்டு சென்றிருப்பதை நாம் அறிவோம். இப்பொழுது குவிக்கப்பட்டுள்ள அணுகுண்டுகள் முப்பது முறை பூமியை அழிக்க வல்லமை பெற்றவை. அணுகுண்டு யுத்தம் ஒன்று ஏற்பட்டால் அழிவு தவிர வேறில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்தது தான். எனவே தான் உலகம் பூராவிலும் உள்ள மக்கள் அணுகுண்டு வேண்டாம் என்று போராடி வருகின்றனர் அணுகுண்டுகளை அழிக்கவும் கோருகின்றனர். வலிமையான அமைதி இயக்கத்தை உருவாக்கி வருகின்றனர்.

இத்தகைய நிலைமையில் பி. ஜெ. பி. அரசு மே 11 மற்றும் 13 தேதிகளில் 5 அணு குண்டுகளை வெடித்தது. பாகிஸ்தானும் பதிலடி கொடுத்தது. இதனால் தெற்கு ஆசிய பிராந்தியத்தில் அணு ஆயுத போட்டிக்கு வித்திடப்பட்டுள்ளது. தனது கூட்டணி உள் நெருக்கடிகளை கருத்தில் கொண்டு ஆட்சியை திடப்படுத்திக் கொள்ளவும், மக்கள் பிரச்சினைகளை தீர்க்க முடியாததால் மக்களை தேசிய வெறியூட்டி திசைதிருப்பவும் தான் பி. ஜெ. பி. அணுகுண்டு 'அரசியலை' நடத்துகிறது. தேசிய பெருமிதமாகவும், ஏகாதிபத்திய எதிர்ப்பாகவும் 'அரசியலை' பி.ஜெ.பி. பேசினாலும் அது பன்னாட்டு நிறுவனங்களிடமும், உலக வங்கி, ஐ. எம். எப்., உலக வர்த்தக கழகம் போன்றவற்றிடமும் சரணாகதி அடையும் போக்கைதான் நாம் தினசரி கண்டு வருகிறோம்.

ஹிரோசிமா- நாகசாகியை நினைவுபடுத்திக் கொள்ளும் நாம் அணுகுண்டும் வேண்டாம், அணு மின்சாரமும் வேண்டாம், சுற்றுசூழல் பாதுகாக்கப் பட வேண்டும், மாசு படுதல் போக்கப்பட வேண்டும், உலகில் அணுயுத்த அச்சுறுத்தல் இல்லாத அமைதி வேண்டும் என்று போராடும் உலக மக்களின் அமைதி இயக்கத்திற்கு நமது ஒருமைப்பாட்டை தெரிவிக்கும் அதே சமயம் இந்தியாவில் இந்துத்துவ சக்திகளால் வழி நடத்தப்படும் பி.ஜெ.பி ஆட்சி உருவாக்கியுள்ள அணு ஆயுதப் போட்டி மற்றும் தெற்காசிய பதற்றத்தை எதிர்த்தும், சீன-பாகிஸ்தான் எதிர்ப்பை மையப் படுத்துவதன் மூலம் தேசிய வெறியை கிளப்பி அண்டை நாடுகளுடனான யுத்த முயற்சியை எதிர்த்தும். அணு ஆயுத சோதனைகளை முகமூடியாக பயன்படுத்தி பொருளாதார அடிமைத்தனத்தில் ஆழமாக செல்வதை எதிர்த்தும் நாட்டினுடைய நலன்களை பிரதிபலிக்காத இந்துத்துவ சக்திகளின் சந்தர்ப்பவாத நோக்கங்களை எதிர்த்தும், வல்லரசுகளின் அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தம் போன்றவற்றை துச்சமாக கருதியும், அணுகுண்டுகளும் யுத்தங்களும் வேண்டாம், அமைதியும் ஜனநாயகமும் மக்களுக்கு உணவும் வேண்டும் என்ற முழக்கத்தை முன்னிலைப்படுத்தியும் புரட்சிகர சக்திகளும் தேசபக்த ஜனநாயக வாதிகளும் ஒருங்கிணைந்து போராட ஹிரோசிமா- நாகசாகி மேல் அணுகுண்டு வீசப்பட்டதை நினைவு கூர்ந்து உறுதியேற்போம். — இல. கோ.

---

(பக்கம் 24-ன் தொடர்ச்சி)

அகற்றிவிடுகின்றது (depeasantisation). இன்னொருபுறம் பெரிய மற்றும் நடுத்தர விவசாயிகள் குத்தகைச் சந்தையில் ஈடுபடுவதன் மூலம் தங்களது முழுகட்டுப்பாட்டின் கீழ் நிலவுடைமையை அபகரித்துக் கொள்கின்றனர் என்பது புலனாகும்.

நிலவுடைமை விசயத்தில் மேற்கண்ட அம்சங்களை புறந்தள்ளிவிட்டு SOC மிகவும் மேலோட்டமாக அணுகுகின்றது. ''நில விற்பனை எனும் சந்தை இந்த இருவகை விவசாயத்திலும் (சிறிய, பெரிய விவசாயம்) முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சிக்கு தடையானவையாகும். மது நாட்டில் ஒருபுறம் நிலக்குவியலும் மற்றொருபுறம் சிறு விவசாய உற்பத்தியும் நிலவுவதும் இவை இரண்டுமே விவசாயத்தில் முதலாளித்துவ வளர்ச்சிக்கு தடையாக இருக்கின்றது. (பக்.148). (தொடரும்)



பொதுவுடைமை

படிப்பகம்

www.padippakam.com

# விவசாயப் பிரச்சனையில் மாநில அமைப்புக் கமிட்டி (SOC)யின் அணுகு முறை குறித்து சில விவாத குறிப்புகள்

—மணிவண்ணன்

சென்ற இதழில் மா. அ. க. (SOC) முதலாளித்துவ வளர்ச்சி குறித்து எவ்வாறு இயந்திரத்தனமான புரிதலையும், தவறான சிந்தனைப் போக்கினையும் கொண்டுள்ளது என்பதைப் பார்த்தோம்.

இனி 'இந்திய விவசாய உற்பத்தியில் முதலாளித்துவ வளர்ச்சி' குறித்து மா.அ.க. (SOC) கொண்டிருக்கும் நிலைபாடுகள் கீழ் கண்ட தலைப்புகளின் கீழ் விவாதிக்கப்படு கின்றன.

(I) முதல் தலைப்பின் கீழ் மூலதன திரட்சி மற்றும் மறு உற்பத்தி பற்றிய மார்க்சிய கோட்பாடுகளை யும், அவற்றை SOC புறக் கணித்து விட்டு எவ்வாறு முதலா ளித்துவ வளர்ச்சியை ஆராய புகுந் துள்ளது என்பது விளக்கப் பட்டுள்ளன. மேலும் நிலவுடைமை குறித்தும், நில வாடகை பற்றிய கோட்பாடுகளையும் இப்பகுதியில் காண்போம்.

(II) இரண்டாவது தலைப்பின் கீழ், 'சந்தை உருவாக்கம்' பற்றிய மார்க் சிய கோட்பாடுகளையும் அவற்றின் மீது மா. அ. க. (SOC) யின் தவறான புரிதலையும், இக்கோட் பாடுகளை இந்திய நிலைமைகளில் பொருத்துவதில் பார்க்கத் தவறிய விவரங்களைப் பற்றியும் விவரிக்கப் பட்டுள்ளன.

(III) இப்பகுதியில் இந்திய விவசாய பொருளாதார வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ், பிரிட்டிசு மற்றும் இந்திய அரசுகள் கொணர்ந்த சீர்த் திருத்தங்களை பற்றியும் அவற்றின் விளைவுகளைப் பற்றியும் சில விபரங்களை பார்த்துள்ளோம். மேலும் வர்க்க அணி சேர்க்கை பற்றியும் அணுகியுள்ளோம்.

(Iv) இப்பகுதியில் வணிக மற்றும் வட்டி மூலதனம் குறித்த மார்க்சிய கோட் பாடுகளையும், சிறு விவசாயம் குறித்த நிலைபாடுகளையும் விளக் கப்பட்டுள்ளன.

(V) இறுதியாக ஒட்டுமொத்த விவசாய பொருளாதாரத்தின் மீது நமது நிலைபாடுகள் முன்வைக்கப் பட் டுள்ளது.

## மூலதன திரட்சி பற்றிய மார்க்சிய கோட்பாடு

முதலாளித்துவ சமூகத்தின் மொத்த உற்பத்தியும் மூன்று வகையான கூறுகளில்: அடங்கியுள்ளன. ஒன்று நிலையான மூலதனம் (Constant Capital) இரண்டு: மாறும் மூல தனம் (variable Capital); மூன்று உபரிமதிப்பு (Surplus va lue) ஆகியனவாகும். இதையே திரட்டல் பற்றிய மார்க்சிய தத்துவம் என்ற ழைக்கின்றோம் (Marx's theory of Realisa-tion)

இந்த விதியின்படி மூலதனம், இரண்டு வகைகளில் நுகரப்படுகின்றது. ஒன்று உற்பத்திச் சாதனங்களின் உற்பத்திக்காக செலவிடப்படும் மூலதனம் ஆகும். அது நிலையான மூலதனம் என்றும் மாறா மூல தனம் என்றும் அழைக்கப்படுகின்றது. இவ்வகையான மூலதனம் இடுபொருட்கள், எந்திரங்கள் என்பன போன்ற உற்பத்தி சாதனங்களினால் மட்டுமே நுகரப்படு கின்றது. மற்றது நுகர்பொருள் உற்பத்திக் காக செலவிடப்படும் மூலதனமாகும். இதை மாறும் மூலதனம் என்று அழைக்க





படிப்பகம்

www.padippakam.com

லாம். இந்த வகை மூலதனம், உற்பத்தி சக்திகளால்— தொழிலாளர்களால்— நுகரப்பட்டு உபரிமதிப்பை உருவாக்க அடிப்படையாக அமைகின்றது.

இவ்வாறு உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தி மற்றும் நுகர்வு பொருள் உற்பத்தி ஆகிய முதலாளித்துவ உற்பத்தியின் இரு பெரும் துறைகளை வேறுபடுத்தி, அவற்றின் வளர்ச்சிப்போக்குகளை ஆராய்வதன் மூலமே முதலாளித்துவ மூலதன திரட்டலின் அடிப்படைகளையும், விளைவுகளையும் நாம் சரியாகப் புரிந்து கொள்ள இயலும்.

உற்பத்திச் சாதன உற்பத்திக்காக செலவிடப்படும் மாறா மூலதனமும், நுகர் பொருள் உற்பத்திக்காக செலவிடப்படும் மாறும் மூலதனமும் அக்கம்பக்கமாகவளர்ந்து வரும் போக்கில் ஒரு கட்டத்தில் மாறா மூலதனம் மாறும் மூலதனத்தைக் காட்டிலும் விரைவாக வளர ஆரம்பிக்கின்றது. இதுவே முதலாளித்துவ மூலதனத் திரட்டல் எனப்படும்.

மூலதனத் திரட்டல் என்பது எப்போதும் நிலையான மூலதனமாகிய மாறா மூலதனத்தின் வளர்ச்சியைப் பொருத்தே அமைகின்றது. மேலும் முதலாளிய உற்பத்திமுறையின் விளைவாக தோன்றியுள்ள சந்தையானது, நுகர்வுப்பொருள் உற்பத்தியைக் காட்டிலும் உற்பத்திச்சாதன உற்பத்தியையே பெரிதும் சார்ந்திருக்கின்றது.

## மறு உற்பத்தி: (Reproduction)

மறு உற்பத்தியை எளிய மறு உற்பத்தி என்றும், விரிவாக்கப்பட்ட மறு உற்பத்தி என்றும் பிரிக்கலாம்.

நுகர்வுப் பொருள் உற்பத்தியில் மாறும் மூலதனமும், உபரிமதிப்பும் அடங்கியுள்ளன என்பதை முன்னமே பார்த்தோம். உற்பத்தியின் போது உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்களிடம் மாறும் மூலதனமும் முதலாளிகளிடம் உபரியும் சென்று சேருகின்றன. உபரிமதிப்பு மூலதனமாக மாற்றமடைகின்றது. எளிய மறுஉற்பத்தியின் போது மொத்த உபரிமதிப்பும் நுகர்வுக்கே பயன்படுத்தப்படுகின்றது. அதில் எந்தப் பகுதியும் மூலதனமாக மாற்றப்படுவதில்லை. எளிய மறு உற்பத்தி என்பது முந்தைய அளவுகளிலேயே அதே உற்பத்தி முறையைக் கொண்டு திரும்பத் திரும்பச் செய்வதாகும்.

உற்பத்திச் சாதன உற்பத்தியின் பகுதிகளாகிய மாறும் மூலதனமும் உபரிமதிப்பும், அந்த உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்களிடமும், முதலாளிகளிடமும் சேர்ந்து அவர்களின் நுகர்வுப் பொருட்களோடு பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகின்றன. இன்னொருபுறம் உற்பத்திச் சாதனங்கள், நுகர்வுப் பொருட்களில் இருக்கும் நிலையான மூலதனத்தைக் கொண்டு பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுகின்றது. இன்னும் குறிப்பாக சொல்லப் போனால் உற்பத்திச் சாதனத்தில் உள்ள மாறும் மூலதனமும், உபரிமதிப்பும், நுகர்வு பொருட்களில் உள்ள நிலையான மூலதனத்தோடு பரிவர்த்தனை செய்துக் கொள்ளப்படுகின்றது. இப்பரிவர்த்தனை போக்குத்தான் மூலதனத் திரட்டலை உருவாக்குகின்றது.

உற்பத்திச்சாதனங்களின் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்களும், முதலாளிகளும் இவ்வாறு தான் தங்கள் வாழ்க்கைக்கான நுகர்வுப் பொருட்களைப் பெற்றுக் கொள்கின்றனர். நுகர்வுப்பொருள் உற்பத்தியில் உள்ள முதலாளிகள், அவற்றை விற்பனை செய்து உற்பத்திக்கான நிலையான மூலதனத்தைப் பெறுகின்றனர். இவ்வாறு பெறப்படும் நிலையான மூலதனம் மறு உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகின்றது.

சிறுதிற மறு உற்பத்தியில் பரிவர்த்தனை செய்து கொள்ளப்படும் இவ்விரு பகுதிகளும் சமமாகவே இருக்கும். அதாவது உற்பத்திச் சாதனங்களில் உள்ள மாறும் மூலதனமும், உபரிமதிப்பும், நுகர்வுப் பொருட்களில்உள்ள நிலையான மூலதனத்திற்கு சமமானதாகவே இருக்கும். ஆனால் விரிவுபடுத்தப்பட்ட மறு உற்பத்தியில் முன்னதாக கூறப்பட்ட உற்பத்திச் சாதனங்களில் உள்ள மாறும் மூலதனமும், உபரிமதிப்பும், நுகர்வுப் பொருட்களில் உள்ள நிலையான மூலதனத்தைக் காட்டிலும் அதிகரித்து இருக்கும். அவ்வாறு அதிகரித்த அளவிலான உற்பத்திச் சாதன உபரி மேன்



படிப்பகம்

www.padippakam.com

மேலும் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

முதலாளித்துவ மூலதனத் திரட்டல் மற்றும் விவாரிக்கப்பட்ட மறுஉற்பத்திக்கான மேற்கண்ட அடிப்படை மார்க்சிய விதிகளை புறக்கணித்துவிட்டு, விவசாய உற்பத்தியில் முதலாளித்துவ வளர்ச்சியை ஆராய மா. அ. க. (SOC) முனைந்துள்ளது. இதன் மூலம் உபரிமதிப்பு தத்துவத்தின் சாராம்சத்தை நீர்த்துப் போகச் செய்து முதலாளித்துவ கட்டமைப்பை நியாயப்படுத்தவும், பாதுகாக்கவுமே துணை நின்றது.

இனி SOC ன் சில கூற்றுக்களை காண்போம்.

''பரிவர்த்தனை பண்ட உற்பத்தி வெகு காலத்திற்கு முன்பே வளர ஆரம்பித்துவிட்டது. தற்போது சில பணப்பயிர் உற்பத்தி முக்கிய பண்ட பயிர்களாயின. ஆனால் விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்தி முறை நிலை நாட்டப்பட்டதற்கு இதுவல்ல அளவு கோல்''

''விவசாயக் கூலித் தொழிலாளர்கள் பெரும் எண்ணிக்கையில் இருப்பதனால் இந்திய விவசாயத்தில் முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் மேலாண்மை பெற்றுவிடவில்லை.

மேலே காட்டப்பட்டுள்ள மேற்கோள்கள் SOC-ன் தவறான தத்துவார்த்த முடிவுகளுக்கான உதாரணங்களாகும். பரிவர்த்தனை பண்ட உற்பத்தி நடைபெறுகின்றன என்றும் அதற்காக உழைப்புச்சக்திகள் விலைக்கு வாங்கப்படுகின்றன என்றும் கூறுவதன் மூலம் விவசாய விளைப்பொருட்களின் உற்பத்தி விலையில் உழைப்புச்சக்தியை விலைக்குவாங்க கொடுக்கப்படும் மாறும் மூலதனமும் அதன் விளைவாக நிலவுடைமையாளர்களுக்கு கிடைக்கும் உபரியும் மட்டுமே அடங்கியுள்ளதாக SOC கருதுகின்றது. உபரிமதிப்பின் பெரும்பகுதி நுகர்வுக்காக மட்டுமே பயன்படுத்தப் படுவதாகக் கருதுகின்றது. இந்த வகையில் உருவாக்கப்படும் உபரி, நிலப்பிரபுத்துவ வகைப்பட்டதாக அமைந்துள்ளது என்று SOC முடிவுக்கு வருகின்றது.

இங்கே நமக்கு சில ஐயங்கள் எழுகின்றன. விவசாய விளைபொருட்களில் குறிப்பாக பணப்பயிர்களின் உற்பத்தி விலையில் விவசாயத் தொழிலாளர்களின் உழைப்புக்கு கொடுக்கப்படும் விலையான மாறும் மூலதனமும், உற்பத்தியாளன் நுகரப்பெறும் உபரியும் மட்டும்தான் அடங்கியுள்ளனவா? பணப்பயிர் உற்பத்திக்கு பயன்பட்ட உற்பத்தி சாதனங்களில் (இயந்திரங்கள், இடுபொருட்கள் ஆகியன) அடங்கியுள்ள நிலையான மூலதனம் யாரால் நுகரப்படுகின்றது? அந்நிலையான மூலதனம் எவற்றால் பரிவர்த்தனை செய்துக் கொள்ளப்படுகின்றது? இந்தக் கேள்விகளுக்கு SOC, விடை காண தவறிவிட்டது என்றே தோன்றுகின்றது.

மேலும் அது, விவசாய விளைபொருட்களில் அடங்கியுள்ள நிலையான மூலதனம் மற்றும் மாறும் மூலதனம் ஆகிய இருபெரும் துறைகளை பிரித்து ஆராய மறுத்துவிட்டது. உற்பத்திச் சாதனங்களில் உள்ள மாறும் மூலதனம் மற்றும் உபரிமதிப்பு, விவசாய உற்பத்திப் பொருட்களின் விலையில் உள்ள நிலையான மூலதனத்தால் பரிவர்த்தனை செய்துக் கொள்ளப்படுகின்றன என்பதை உள்வாங்க SOC தவறிவிட்டது. மேலும் பின்னதைக் காட்டிலும் முன்னது அதிகரித்த அளவில் இருப்பதையும் கவனிக்க மறந்துவிட்டது.

கீழே கண்டுள்ள புள்ளி விபரங்களின் துணை கொண்டு இந்திய விவசாய பண்ட உற்பத்தியின் வளர்ச்சிப்போக்கில் நிலையான மூலதனத்தின் வளர்ச்சி, மாறும் மூலதனத்தின் வளர்ச்சியோடு ஒப்பிடும் போது முன்னது, பின்னதைக் காட்டிலும் அதிகரித்த போக்கில் இருப்பதை கண்கூடாக காணலாம். அதாவது உற்பத்தி சக்திகளுக்கு கொடுக்கப்படும் விலையை விட உற்பத்திச் சாதனங்களுக்கே அதிக விலை கொடுக்க நேரிடுகின்றது.

இந்திய அளவில் 1988-90 ஆண்டு நிலவரப்படி, மொத்த பயிரிடும் பரப்பில் 64 சதவிகிதம் பரப்பில் உயர்தர வீரியவிதைகள் (HYV) பயிரிட பயன்படுத்தப்பட்டன. 1968-69 இல் இந்திய அளவில் ஒரு ஹெக்டேருக்கு



படிப்பகம்

www.padippakam.com

சராசரியாக 189.6 கி. கி. ஆக இருந்தது, 1989-90 களில் 1149 கி. கி. அளவுக்கு உயர்ந்துள்ளது. அதாவது 606 சதவிகிதம் உயர்ந்துள்ளது. மேலும் ஆழ் குழாய் கிணறுமற்றும் மின்சார பம்புசெட்களின் எண்ணிக்கை 1960-61 இல் 197.5 ஆயிரங்களாக இருந்து, 1990-91 இல் 8, 818.3 ஆயிரங்களாக உயர்ந்துள்ளது. அதாவது 4458 சதவிகிதம் உயர்ந்துள்ளது. 1960-85 இடைப்பட்ட ஆண்டுகளில் டீசல் பம்ப்செட்களின் எண்ணிக்கை 1916 சதவிகித வளர்ச்சியை எட்டியது.

அதேபோல் 1966 முதல் 1982 வரையிலான காலத்தில் டிராக்டர்களின் பயன்பாடு 532 நூறுகளிலிருந்து, 5185 நூறுகள் வரை எட்டியது. இது 1667 சதவிகித வளர்ச்சியாகும். 1950-51 களில் இந்தியாவின் மொத்த கிராமங்களில் 0.5 சதவிகிதத்தைக் கொண்ட 3061 கிராமங்களுக்கு மட்டுமே மின்சாரம் கிடைத்து வந்தது. ஆனால் 1990-91 களில் சுமார் 82.7 சதவிகிதத்தைக் கொண்ட 4, 78, 966 கிராமங்களுக்கு மின்வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்திய விவசாய உற்பத்திற்குத் தேவைப்படும் மூலதனம், 1950-51 களில் நிறுவனமயமாக்கப்பட்ட கூட்டுறவு கடன் சங்கங்கள், வணிக வங்கிகள் மற்றும் பிராந்திய கிராம வங்கிகள் போன்றவை மூலமாக 24 கோடி மட்டுமே பெறப்பட்டது. ஆனால் 1989-90 களில் 13, 022 கோடியாக உயர்ந்துள்ளது. அதாவது 54258 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. மேலும் சிறந்த விதை உற்பத்தியைப் பொறுத்தவரை 1980-1984 வரையில் மட்டும் 233 சதவிகிதம் அதிகமாக இருந்தது. மொத்த மின்சக்தி உற்பத்தியிலிருந்து விவசாயத்திற்கு 1950 இல் 4.2 சதவிகிதம் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது. 1989-90 களில் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்ட மின்சக்தியின் அளவு 25 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. (Sources - Indian Economic Information Year book, A. N. Agarval el. al. 1991-92)

ஆக, ஒப்பீட்டுரீதியாக உற்பத்தி சாதனங்களின் உற்பத்தி அபரிமிதமாக வளர்ந்து காணப்படுகின்றது என்பதை மறுக்க இயலாது. இது முதலாளித்துவ வகைப்பட்ட மூலதன திரட்டலின் விளைவேயன்றி SOC குறிப்பிடுவதுபோல நிலப்பிரபுத்துவ வகைப்பட்ட உபரிஉழைப்பிலிருந்தும், உபரிஉற்பத்தியிலிருந்தும் உருவான சுரண்டலால் திரண்டிருக்க அடிப்படை இல்லை.

உபரிமதிப்பு, மூலதன திரட்டல், மறுஉற்பத்தி போன்றவைகளுக்கான மார்க்சிய அடிப்படைகளை புறந்தள்ளி விட்டு, கீழ்க்கண்ட தத்துவார்த்த முடிவுகளின் அடிப்படையில் SOC, இந்திய விவசாய உற்பத்தியில் அரை நிலவுடைமை தன்மை மேலோங்கியுள்ளதாகக் கூறுகின்றது.

(1) நிலம் இன்னும் ஒரு பரிவர்த்தனை பண்டமாகிவிடவில்லை.

(2) நிலப்பிரபுத்துவ முறையிலான நில வாடகையே மேலோங்கியுள்ளது. முதலாளித்துவ முறையிலான நில வாடகை முறை இல்லை.

(3) சந்தைக்கான பண்டப்பயிர் உற்பத்திபிரதானமாகிவிடவில்லை.

(4) விவசாயத்தொழிலாளர்கள் பெரும் எண்ணிக்கையில் இருப்பினும் நிலப்பிரபுத்துவ உறவுகளே நீடிக்கின்றன. இனி ஒவ்வொன்றின் மீதும் நமது விவாதப் பொருளை முன் வைப்போம்.

## நிலவுடைமை குறித்து

நிலம் ஒரு எல்லைக்குட்பட்டது. அது உற்பத்தியான பொருளன்று. நிலத்தைப் பொறுத்து மூலதனத் திரட்டல் என்பது விவசாயக் குடும்பங்களின் நிலத்தில் சொத்துரிமையை (Ownesship holders) கொண்டதனால் அன்று. மாறாக பெருநிலவுடைமையாளர்கள் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் நிலவுடைமை (Operatioral Holders) குவிந்திருப்பதையே முதலாளித்துவ மூலதன திரட்டலுக்குப் பயன்படும். இதில் குத்தகைச் சந்தையின் பங்கு முக்கியமானது. SOC கூறுவதைப் போன்று நிலத்தை விலைக்கு வாங்கி விவசாயம் செய்வது முதலாளித்துவ விவசாயத்திற்கு உசிதமானதல்ல என்பது உண்மையே. மாறாக தங்கள் மூலதனத்தை விவசாயத்தை மேம்படுத்த, உற்பத்தியை பெருக்க இடவேண்டும் என்பது மட்டுமே முதலாளித்துவ உற்பத்தி முறையின் கூறாகும். அதற்கு முதலாளித்துவ குத்தகை முறை ஏதுவாகின்றது. முதலில் நிலத்தில் சொத்துடைமையில் (Ownership) மாறி வந்துள்ள மாற்றங்களை காண்போம்.



படிப்பகம்

www.padippakam.com

# அட்டவணை

## இந்திய அளவில் நிலவுடைமை விநியோகம் (குடும்பவாரியாக)

| நிலவுடைமையின் அளவு | NSS—8 (1953-54) குடும்பங்களின் எண்ணிக்கை | நிலப்பரப்பு | NSS.17 (1961-62) கு. எ. | நி. ப. | NSS.26 (1971-72) கு. எ. | நி. ப. | NSS-37 (1982) கு. எ. | நி. ப. |
|---|---|---|---|---|---|---|---|---|
| நிலமற்றவர்கள் | 23.09 | — | 11.69 | — | 9.64 | — | 11.33 | — |
| குறு விவசாயிகள் (0.01—099 ஏக்.) | 24.18 | 1.36 | 32.56 | 1.59 | 35.24 | 2.07 | 36.88 | 2.75 |
| மிகச்சிறிய விவசாயிகள் (1.00—2.49 ஏக்) | 13.98 | 4.86 | 15.86 | 6.00 | 17.74 | 7.69 | 18.43 | 9.47 |
| சிறுவிவசாயிகள் (2.50—4.99 ஏக்) | 13.49 | 10.09 | 15.09 | 12.40 | 15.49 | 14.67 | 14.70 | 16.49 |
| நடுத்தர விவசாயிகள் (5.00—14.99 ஏக்) | 17.54 | 31.18 | 17.96 | 34.51 | 16.56 | 36.49 | 14.68 | 38.03 |
| பெரிய விவசாயிகள் (15.00க்கு மேல்) | 7.72 | 52.51 | 6.84 | 45.50 | 5.33 | 39.08 | 3.98 | 33.26 |

ஆதாரம் — நிலவுடைமை பற்றிய NSS அறிக்கைகள்

படிப்பகம்

www.padippakam.com

நிலவுடைமையில் ஏற்பட்ட மாற்றங்கள்) Changes in Ownership of land holdings)

1953-54 களில் நிலமற்ற விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை 23.09 சதவிகிதமாகும். 1961-62 இல் இது 11.69 சதவிகிதமாகும். பின்னர் 1971-72 இல் இவர்களின் எண்ணிக்கை 9.64 சதவிகிதமாக மேலும் குறைந்து 1982இல் 11.33 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. 1953-54இல் ஒரு ஏக்கருக்கு குறைவாக நிலம் உடைய 24.18% குறு விவசாயிகள் குடும்பங்களின் சொந்த நிலம் 1.36 சதவிகித அளவுடையதாகும். இது 1982இல் 36.88 சதவிகித அளவுக்கு குறு விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை உயர்ந்து, அவர்கள் உடைமையாகக் கொண்ட நிலப்பரப்பின் அளவும் 2.75 சதவிகிதமாக அதிகரித்துள்ளது. 1 முதல் 2.5 ஏக்கர் வரை நிலத்தை சொந்தமாக கொண்ட மிகச்சிறிய விவசாயிகள் (Marginal) 1953-54 இல் 13.98 சதவிகிதமாக இருந்தனர். இவர்களின் எண்ணிக்கை 1982 இல் 18.43 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. அவர்கள் சொந்தமாகக் கொண்ட நிலப்பரப்பின் அளவும் 1953-54 இல் 4.86 சதவிகிதமாக இருந்து 1982இல் 9.47 சதவிகிதமாக அதிகரித்துள்ளது.

1953-54இல் 2.5 ஏக்கருக்கு மேல் 5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் உடைய சிறு விவசாயி (Small) குடும்பங்களின் எண்ணிக்கையும் அவர்கள் கொண்டிருந்த நிலப்பரப்பின் அளவும் முறையே 13.49 சதவிகிதமும் 10.09 சதவிகிதமாகும். அவர்களின் எண்ணிக்கை 1982இல் 14.7 சதவிகிதமும் அவர்கள் சொந்தமாகக் கொண்ட நிலப்பரப்பு 16.49 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது.

5 ஏக்கருக்கும் அதிகமாகவும், 15 ஏக்கருக்குக் குறைவாகவும் உள்ள நடுத்தர விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை 1953-54இல் 17.54 சதவிகிதமாகும். இவர்களிடம் 31.18 சதவிகித நிலப்பரப்பு இருந்து. இது 1982இல் 14.68 சதவிகிதமாக குறைந்தது. அவர்கள் கொண்ட நிலப்பரப்பும் 38.03 சதவிகிதமாக இருந்தது.

15 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பை கொண்டிருக்கும் பெரிய விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை 1953-54 இல் 7.72 சதவிகிதமாகும். அவர்கள் கொண்ட நிலப்பரப்பின் அளவு 52.51 சதவிகிதமாகும். இந்த விவரங்கள் 1982இல் பெரிய விவசாயிகளின் எண்ணிக்கை 3.98 ஆகக் குறைந்து காணப்படுகின்றது. இவர்கள் கொண்ட நிலப்பரப்பின் அளவு 33.26 சதவிகிதமாகும்.

மேலும் அட்டவணையில் கண்ட விபரங்களைக் கொண்டு பார்க்கும் போது 1953-54 இல் சுமார் 4 இல் 1 பங்கு மக்கள் தொகையினர் நிலமற்றும் சுமார் 8 சதவிகிதத்திற்கும் குறைவானவர்கள் பாதிக்கு மேற்பட்ட நிலபரப்பை சொந்தமாகவும் கொண்டிருந்தனர். அதே பிரிவில் அடுத்தடுத்த பத்தாண்டுகளில் அவர்களின் எண்ணிக்கையும், அவர்கள் சொந்தமாகக் கொண்ட நிலப்பரப்பின் அளவும் குறைந்து கொண்டே வந்தன. 1982இல் சுமார் 4 சதவிகிதத்திற்கும் குறைவான பெரிய விவசாயக் குடும்பங்கள் 1/3 பங்கு நிலபரப்பை சொந்தமாக கொண்டிருந்தனர். நடுத்தர விவசாய குடும்பங்களை பொறுத்த வரை அவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டு வந்தாலும், அவர்கள் சொந்தமாகக் கொண்ட நிலப்பரப்பின் அளவு தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது. குறு, மிகச்சிறிய, சிறியவிவசாயிகளைப் பொறுத்த வரை அப்பிரிவுக் குடும்பங்களின் எண்ணிக்கையும், அவர்கள் கொண்ட நிலப்பரப்பின் அளவுகளும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. நிலமற்ற விவசாயிகளின் போக்கு ஏற்றத் தாழ்வான நிலையில் இருந்தாலும் 1970 களிலிருந்து அவர்களின் எண்ணிக்கை 42 சதவிகித அளவுக்கு உயர்ந்துள்ளது.

மேற்கண்ட போக்குகள், ஒன்றை உறுதிப்படுத்துகின்றன. அதாவது, நிலப்பிரபுத்துவ சாராம்சத்தைக் கொண்ட பெருநிலவுடைமை முறை சிதறியடிக்கப்பட்டு, பிளவு ஏற்பட்டு, குறு, மிகச்சிறிய, சிறிய விவசாயப் பிரிவினர்களுக்கு பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது. இதனூடே ஒருபுறம் உற்பத்திச் சாதனக் குவிதல் நிகழ்கின்றது.



படிப்பகம்

www.padippakam.com

இனி இந்திய அளவில் உள்ள மொத்த விவசாயக் குடும்பங்களின் கட்டுப்பாட்டில் உள்ள சராசரி நிலவுடைமையின் அளவு, அக்குடும்பங்களுக்குச் சொந்தமாக உரிமை கொண்ட சராசரி நிலவுடைமையின் அளவை விட அதிகரித்துக் காணப்படுகின்றன. என்பதை பார்ப்போம். 1953-54 களில் மொத்த விவசாய குடும்பங்களின் கட்டுப் பாட்டில் இருந்த சராசரி நிலஅளவு 7.53 ஏக்கராகும். ஆனால் அவர்களின் சொத்து ரிமையாகப் பெற்றிருந்த சராசரி நில அளவு 4.81 ஏக்கராகும். அடுத்து 1961-62 களில் மொத்த விவசாயக் குடும்பங்களின் கட்டுப் பாட்டின் கீழ் இருந்த சராசரி நிலஅளவு, சொந்தமாக உரிமைகொண்ட நிலஅளவுகள் முறையே 6.49 மற்றும் 4.39 ஏக்கர்களாகும். 1971-72 இல் இதே விபரங்கள் முறையே 5.44 மற்றும் 3.77 ஏக்கர்களாகும். 1982 இல் இதே விபரங்கள் 4.17 மற்றும் 3.15 ஏக்கர் களாகவும் இருந்தன. (NSS Reports on Land Holdings)

மேற்கண்ட இரண்டு வகையினங்களின் அளவுகள் அடுத்தடுத்த பத்தாண்டுகளில் குறைந்து கொண்டே வருவது என்பது குத்தகை நிகழ்வில் இருந்த வீழ்ச்சியையே காட்டுகின்றது. மேலும் 'சுய விவசாயம்' என்ற அம்சம் வளர்ந்துள்ளது. இதனால் நிலத்தில் இல்லாத நிலப்பிரபுக்களின் (absentee land lords) எண்ணிக்கை குறைந் துள்ளது. என்றாலும் சொத்துரிமையாகக் கொண்ட சராசரி நிலப்பரப்பை விட கட்டுப் பாட்டின் கீழ் இருக்கும் சராசரி நிலப்பரப் பின் அளவு கூடுதலாக அமைந்திருக்க காண லாம்.

பசுமைப்புரட்சி பகுதிகளில் சிறு நிலவு டைமையாளர்கள் பெருநிலவுடைமையாளர் களிடம் குத்தகைக்கு விடும் போக்கு அதிகள வில் நிலவுகின்றது. இதன் மூலம் சிறு நிலவு டைமை பெருநிலவுடையாளர்களின் கட்டுப் பாட்டில் கொண்டு வரப்பட்டது குறிப்பிடத் தக்கது. பசுமைப்புரட்சி அதிகமான பாதிப்பை ஏற்படுத்தாத தமிழ்நாடு மேற்குவங்காளம் போன்ற மாநிலங்களில் பெருநிலவுடைமை யாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள நிலத் தின் அளவும், சொந்தமாகக் கொண்ட நிலத்தின் அளவும் சமமாக இருந்தாலும், சிறு மற்றும் குறுநில விவசாயிகளின் கட்டுப் பாட்டின் கீழ் உள்ள நிலத்தின் அளவு, சொந்தமாகக் கொண்ட நிலப்பரப்பின் அளவைவிட அதிகரித்துள்ளது.

பஞ்சாப், ஹரியானா ஆகிய மாநிலங் களில் குத்தகைக்கு விடப்பட்ட மொத்த நிலப்பரப்பில் நடுத்தர மற்றும் பெரு நில வுடைமையாளர்களே அதி மான அளவில் குத்தகைக்கு எடுத்துக் கொண்டுள்ளனர். ஆனால் இது தமிழ்நாடு, மேற்குவங்காளம் போன்ற மாநிலங்களில் மிக மிகக் குறை வாகும். அதேசமயம், குத்தகைக்கு விடப் பட்ட மொத்த நிலப்பரப்பின் நடுத்தர மற்றும் பெருநிலவுடைமையாளர்கள் தங்கள் நிலங்களை குத்தகைக்கு விடும் போக்கு பஞ்சாப்- ஹரியானா போன்ற மாநிலங்களை விடவும், தமிழ் நாடு, மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களில் அதிக அளவில் நடை பெறுகின்றது. அதற்கு காரணம், விவசாயக் கூலிகளை வேலைக்கு அமர்த்திக் கொண்டு சொந்த விவசாயத்தில் ஈடுபடுவதைவிடக் குத்தகைக்கு விடுவதில் அதிக லாபத்தைப் பெற முடிகின்றது. இவ்வாறு பெருநிலவு டைமையாளர்கள் குத்தகைக்கு விடும் போக்கிலும் குறிப்பிடத்தக்க ஒரு விசயம் என்னவென்றால் அந்த கிராம எல்லைக்கப் பாலிருந்து— அதற்கு வெளியே குத்தகைக்கு பெறுவது தமிழகத்திலும், மேற்குவங்காளத் திலும் பார்க்க முடிகின்றது.

குத்தகைச் சந்தை என்ற விசயத்தை பொருத்தமட்டிலும் பஞ்சாப், ஹரியானா, தமிழ்நாடு, மேற்குவங்காளம் போன்ற மாநிலங்கள் அனைத்திலும் சிறு மற்றும் குறு நிலவுடைமையாளர்கள் தங்கள் உடைமையி லுள்ள மொத்த நிலத்தையுமே குத்தகைக்கு விட்டுவிடுகின்றனர். அதாவது 2 ஹெக்டே ருக்கும் குறைவான நிலத்தையுடைய சிறு மற்றும் குறு விவசாயிகள் அனைவரும் சேர்ந்து 100 சதவிகித அளவுக்கு குத்தகைக்கு விட்டுவிடுகின்றனர். அதே சமயம் இந்திய அளவில் அது 82 சதவிகிதமாகும். இந்தப் போக்கானது ஒருபுறம் சிறு மற்றும் குறு விவசாயிகளை சொந்த விவசாயத்திலிருந்து

(தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க)



படிப்பகம்

www.padippakam.com

தி.மு.க ஆட்சியே!

# பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தை திரும்பப் பெறு!

இந்து-முஸ்லீம் மத அடிப்படைவாதிகளுக்கு எதிரானவை மற்றும். பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்குபவை என்ற பெயரில் பயங்கரவாத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தை தி.மு.க ஆட்சி இயற்றியுள்ளது. உண்மையில் தி.மு.க-வானது மத்தியில் ஆட்சியிலிருக்கும் பாரதிய ஜனதா கட்சியுடன் இணக்கமாக செல்வதற்கும் தமிழ்நாட்டில் இந்து முன்னணி இராஜகோபாலன் மற்றும் சோ போன்றவர்களின் தூண்டுதலின் பெயரிலும் சிறுபான்மையினரான முஸ்லீம்களுக்கு எதிராகவே இச்சட்டத்தை கொணர்ந்துள்ளது.

தடா சட்டத்தின் மறுபிறவியான இச்சட்டம் காலப்போக்கில் சிறுபான்மையினர் மீது மட்டுமல்ல, தொழிலாளி-விவசாயி இயக்கங்கள், இன உரிமை ஆர்வலர்கள், ஜாதி ஒடுக்குமுறை எதிர்ப்பாளர்கள் ஆகியோர் மீது பாய்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

### தடாவின் மறுபிறவிதான் இந்த கருப்புச் சட்டம் என்பது ஏன்?

(1) மூடப்பட்ட அறைக்குள் இரகசிய விசாரணை (2) குற்றம் சாட்டப்பட்டவர், காவல் துறை அதிகாரியிடம் தரும் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படுதல். இது சாதாரண குற்றவியல் சட்டத்திற்கு முரணானது. காவல் துறை அதிகாரிகள் சித்திரவதை முறைகளை கையாண்டு குற்ற ஒப்புதல் வாக்குமூலங்கள் பெறக்கூடிய சாத்தியப்பாடுகளை சாதாரண குற்றவியல் சட்டம் உணர்ந்துள்ளது. (3) காவல் துறைக் காவலில் 15 நாட்களுக்கு பதில் 60 நாட்கள் வைத்திருத்தல். குற்றப் பத்திரிகை 90 நாட்களுக்குள் தாக்கல் செய்வதற்கு பதில் ஓராண்டுவரை கால அவகாசம். எனவே ஒரு ஆண்டு சிறைவாசம் கட்டாயம், (4) பின்னரும் பிணையில் வெளிவருவதற்கு தடைகள் (5) கீழ்நிலை காவல் துறையினரே வழக்கு தொடரும் நிலைமை (6) குற்றம் சாட்டப்பட்டவர்கள் சொத்துக்களை விசாரணைக்கு முன்னரே பறிமுதல் செய்யும் அதிகாரம்.

### 'பயங்கரவாதம்' தோன்றியதன் அர்சியல் வரலாறு:

ரயில் வண்டிகள், பொது இடங்கள் போன்றவற்றில் வெடிகுண்டுகளை வைத்து அப்பாவி மக்களைக் கொல்வது, சேதங்களை ஏற்படுத்துவது போன்ற பயங்கரவாத மற்றும் தான் தோன்றித்தனமான வன்முறைகள் நிச்சயமாக வெறுத்தொதுக்க வேண்டியவையும், கண்டனத்துக்குள்ளாக்கப்பட வேண்டியவையுமாகும். ஆனால் அவற்றுக்கான பதில், நிலைமைகளை மோசமாக்கக் கூடிய கொடூரமான சட்டமல்ல. மாறாக, சிறுபான்மை சமூகத்திற்கு நம்பிக்கையூட்டி அவர்களது உரிமைகளுக்கான நியாயமான பாதுகாப்புக் கிடைக்கும் என்று உத்திரவாதம் செய்வதுதான். ஆனால் இதற்கு மாறாக நாம் பார்த்து வருவதெல்லாம் இந்து அடிப்படைவாதச் சக்திகளின் பகிரங்கமான வளர்ச்சியும் அதற்கு ஆட்சியிலுள்ள கட்சிகளும், எதிர்க்கட்சிகளும் கொடுத்து வரும் ஆதரவும்தான். எனவே, சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த இளைஞர்கள் விரக்தியும் வெறுப்பு மடைவதில் வியப்பில்லை. தவறாக வழிகாட்டப்பட்டவர்கள் - அவர்கள் இளைஞர்களாகட்டும் அல்லது முதியவர்களாகட்டும் - செய்த தவறுகளை ஒரு சட்டமியற்றுவதன் மூலம் மேலும் மோசமானவையாக்குவது நியாயமாகுமா? அச்சட்டம் அச்சிறுபான்மைச் சமூகம் மேலும் அந்நியப்படுவதற்கும் தொல்லைகளை அனுபவிப்பதற்கும்தானே வழிவகுக்கும்?

'தமிழ்நாட்டில் தலை தூக்கியுள்ள 'பயங்கரவாதம்' ஒரு அரசியல் நிகழ்வுப் போக்கு என்பதையும் அதற்கு ஒரு அரசியல் வரலாறு உள்ளது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அண்மையில் கோயமுத்தூரில் பல அப்பாவி மக்களின் உயிர்களைப் பலி கொண்ட தொடர் குண்டு வெடிப்பும் கூட, 30-11-97

படிப்பகம்

www.padippakam.com


முதல் 7.-12-97 வரை குழந்தைகள் உள்ளிட்ட சாதாரண, அப்பாவி முஸ்லீம்களைத் திட்டமிட்டுக் கொலை செய்து, 500 கோடி ரூபாய்க்கும் அதிகமான மதிப்புள்ள முஸ்லிம் மக்களின் உடமைக்ளைப் பரவலாக நாசப்படுத்தியதற்குப் பதிலடி தருவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தான். இந்தக் கருத்தை அரசாங்கம் வெளியிட்டுள்ள 'வெள்ளை அறிக்கை'யே ஒப்புக் கொள்கிறது. அந்தத் தாக்குதல்கள் கோயம்புத்தூரிலுள்ள காவல் துறையினரிடையே உள்ள வகுப்புவாதச் சக்திகளும் இந்து அடிப்படைவாதச் சக்திகளும் ஒன்றிணைந்த முறையில் திட்டமிட்டுச் செய்யப்பட்டவையாகும். மூன்று முஸ்லிம் இளைஞர்கள் ஒரு காவலரை வெட்டிக் கொன்ற தனிப்பட்ட சம்பவமொன்றால் ஏற்பட்ட சூழ்நிலையை இச்சக்திகள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றப் பயன்படுத்திக் கொண்டனர். காயமடைந்த முஸ்லிம்கள் மருத்துவ சிகிச்சைக்காக அரசுப் பொது மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட போது அவர்களைத் தாக்குவதற்காக இந்து அடிப்படைவாதக் கும்பல்களும் காவல் துறையைச் சேர்ந்த சிலரும் காத்திருந்தனர் என்பது, முஸ்லிம்கள் மீதான அந்தத் தாக்குதல் நன்கு திட்டமிட்டுச் செய்யப்பட்டதாகும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

செய்தி ஊடகங்களைச் சேர்ந்தவர்கள், உயர் அரசாங்க அதிகாரிகள் ஆகியோரின் 'கண்களுக்கு எதிரிலேயே காயமடைந்த முஸ்லிம் இளைஞர்கள் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டனர்; இரத்த வெறிபிடித்த இந்து அடிப்படைவாதக் கும்பல் அதை உற்சாகத்தோடு கண்டுகளித்துக் கொண்டிருந்தது. காயமடைந்த முஸ்லிம்களுக்கு சிகிச்சை தரக்கூடாது என்று மருத்துவமனை ஊழியர்களை அச்சுறுத்திய இந்து அடிப்படைவாதச் சக்திகள், மருத்துவமனைக்குள் புகுந்து அங்கிருந்த முஸ்லிம்களைக் கொன்றனர். பிணவறையில் இருந்த பிணங்கள்கூட இந்து அடிப்படைவாதிகளால் விட்டுவைக்கப்படவில்லை. அவை உண்மையிலேயே செத்த பிணங்கள்தாம் என்பதை உறுதி செய்து கொள்வதற்காக அவற்றைக் கத்தியால் வெட்டியும் குத்தியும் பார்த்தனர்.

தமிழ்நாடு அரசாங்கம் இந்த நிகழ்ச்சிகளை வாய்மூடி மௌனியாகப் பார்த்துக் கொண்டிருந்தது. இன்றுவரை குற்றம் புரிந்த அதிகாரிகள் மீதும் பிறர் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மத்தியில் ஆட்சி செய்யும் பா.ஜ.க. அரசாங்கத்தைப் பகைத்துக் கொள்ள வேண்டி வருமே என்று அஞ்சி இந்து அடிப்படைவாதக் கொலைக்காரர்களைக் கையாள்வதில் தமிழ்நாடு அரசாங்கம் பயப்படுவதாகத் தோன்றுகிறது. இராம.கோபாலன் போன்ற இந்து அடிப்படைவாதத் தலைவர்களும், இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி போன்ற சக்திகளும் சிறுபான்மை சமூகத்தினரை இழிவு செய்தும் அவதூறு செய்தும் நடத்தி வரும் தாக்குதல்களைத் தடுக்க இன்றைய மாநில அரசாங்கம் எதனையும் செய்யவில்லை. முஸ்லிம்களுக்கு எதிராக மேற்சொன்ன நபர்களும் குழுக்களும் கடந்த 10 ஆண்டுகளாக எவ்விதத் தங்குதடையுமின்றி நடத்திவரும் வெறித்தனமான, மனத்தைப் புண்படுத்துகிற பிரச்சாரம்தான் இந்த மாநிலத்தில் மத விரோதங்களுக்கும் மத அடிப்படையில் மக்கள் பிளவுபடுவதற்கும் காரணமாக உள்ளது. அதற்கு எதிர் விளைவாகத்தான், சிறுபான்மைச் சமூகத்தினரிடையே இருந்து, அதன் உரிமைகளையும் அடையாளங்களையும் பாதுகாப்பதாக உரிமை கொண்டாடும் இஸ்லாமிய அடிப்படைவாதச் சக்திகளும் தோன்றி பதிலடி நடவடிக்கைகளிலும் தண்டிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டன.

இம்மாநிலத்தில் அடிப்படைவாதம், பயங்கரவாதம் ஆகியன வளர்ச்சியடைவதற்கான சமூக, பொருளாதார, அரசியல் காரணிகளை ஆய்ந்தறிவதற்கும் அவற்றைக் களைவதற்கும் பதிலாக, அரசாங்கம் கடுமையான சட்டங்களைக் கொண்டு வருவதில் மட்டுமே முனைப்புக் காட்டுகிறது. அரசாங்கத்திடம் அரசியல் உறுதிப்பாட்டுடன் செயல்படும் விருப்பம் மட்டுமே இருக்குமேயானால் குற்றம் புரிபவர்களைத் தண்டிக்க சாதாரணச் சட்டங்களே போதுமானவை.

எனவே, தி.மு.க ஆட்சியானது பயங்கரவாத நடிவடிக்கை தடுப்புச் சட்டத்தை திரும்பப் பெற கோருகிறோம். இந்த கருப்பு சட்டத்தை எதிர்த்து தொடர்ந்து போராடுமாறு புரட்சிகர ஜனநாயக சக்திகளுக்கு வேண்டுகோள் விடுக்கிறோம்.

**இல.கோ.**

'POTHUVUDAIMAI' Marxist-Leninist Idiological Bi-Monthly (Tamil)
L. Govindaswamy, C/o Silapathikaram, No.1, First St., Somasudara Bharathi Nagar, Vadapalani, Chennai-600 026.

படிப்பகம்